விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 17 திங்கட்கிழமை (30.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 042

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## சுருதியை மாற்றுகிறது கூட்டமைப்பு

# சுதந்திரக் கட்சி அமைச்சர்களால் புதிய அரசியலமைப்பு தாமதம்!

### சுமந்திரன் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியலமைப்பு தயாரிப்பு பணிகளில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை சேர்ந்த அமைச்சர்கள் இதுவரை இணைந்து செயற்பட்டமைக்கு மாறாக கருத்துக்களை கூறுவதற்கு தலைப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக அரசியலமைப்பு தயாரிப்பு பணிகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகவும் புதிய அரசியல் அமைப்பு பணிகள் முற்றுமுழுதாக சுமூகமாக நிறைவடையும் என எதிர்பார்க்கவில்லை எனவும் ஆகவே இந்த தடங்கல்களை எதிர்கொள்ள வேண்டிய தேவை உள்ளதாகவும் சுமந்திரன் கூறியுள்ளார்.

இதேவேளை அரசியலமைப்பு வழிநடத்தல் குழுவின் சந்திப்பு கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற போதிலும் எந்த ஒரு கலந்துரையாடலும் இல்லாமல் 10 நிமிடங்களிலேயே அந்த சந்திப்பு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. தமது முடிவை அறிவி

23ஆம் பக்கம் பார்க்க....



# இலங்கைக்கு குடைச்சல் கொடுத்த அமெரிக்க அதிகாரிகள் பதவி நீக்கம்



(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் 4 பேர் அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்பால் பதவி நீக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நால்வரும் இலங்கை படையினர் யுத்தக் குற்றத்தில் ஈடுபட்டுள்ளதாக குற்றச்சாட்டினை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஜெனிவா கூட்டத் தொடரில் முன்வைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

23ஆம் பக்கம் பார்க்க....



## நாவற்குழியில் வீட்டுத்திட்டம் இன்று அடிக்கல்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் தமிழ், சிங்கள குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்து கொடுப்பதற்கென இன்றைய தினம் காலை 10.30 மணியளவில் வீட்டு திட்டத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்படவுள்ளன. இந்த அடிக்கல்லை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் நாட்டி வைக்கவுள்ளார்.

நாவற்குழி மேற்கு பகுதியில் வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான

23ஆம் பக்கம் பார்க்க....

## பயங்கரங்களுக்கும் மரணிப்பதற்கும் தயாரா?

### பொன்சேகா கேள்வி



(கொழும்பு)

மகிந்த மீண்டும் அதிகாரத்திற்கு வந்தால் மரணிப்பதற்கும், பயங்கரங்களுக்கும் முகம் கொடுக்கவும் தயாரா என கேள்வி எழுப்பியுள்ளார்.

மகிந்தவின் ஆட்சிக் கவிழ்ப்புப் திட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஏழு முஸ்லிம் நாட்டவர்கள் அமெ.வுக்குள் நுழைய தடை!


### ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடி

(வாஷிங்டன்)

ஈரான், ஈராக், சிரியா உள்ளிட்ட 7 முஸ்லிம் நாட்டவர் அமெரிக்காவினுள் நுழைய தடை விதிப்பதாக ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில், ஈரான், ஈராக், சிரியா, லிபியா, யேமன், சூடான், சோமாலியா ஆகிய 7 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடை தனது நிர்வாகம், கண்

24ஆம் பக்கம் பார்க்க....



## மீன்பிடிக்கச் சென்ற தந்தையும் மகனும் சாவு



24ஆம் பக்கம் பார்க்க....

## சுமந்திரனின் கருத்துக்கு ஹெல உறுமய கண்டனம்

(கொழும்பு)

தெற்கில் உள்ள சில அடிப்படைவாதிகள் தம்மை கொலை செய்ய முயற்சிப்பதாக சுமந்திரன் தெரிவித்த கருத்திற்கு ஹெல உறுமய கண்டனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஹெல உறுமயவின் ஊடகப்பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க இந்த கருத்தை வெளியிட்டார்.

தமிழ்த் தலைவர்களை கொலை செய்யும் அளவிற்கு தெற்கில் இனவாதிகள் இல்லை என அவர் இதன் போது குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பு உருவாகுவதை தடுக்கும் நோக்கில் சுமந்திரன் இவ்வாறாக செயற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை கொலை செய்யும் நோக்கில் செயற்பட்ட நான்கு முன்னாள் விடுதலை புலிப் போராளி

24ஆம் பக்கம் பார்க்க....

## ஏ9 வீதி விபத்து 9 பல்கலைக்கழக மாணவர் படுகாயம்

(மல்லாவி)

யாழ்ப்பாணத்திலிருந்து மொரட்டுவ சென்ற தனியார் பேருந்து ஏ9 வீதியில் உள்ள மன்னகுளம் பகுதியில் எருமை மாட்டு கூட்டத்துன் மோதி விபத்துக்குள்ளானதில் மொரட்டுவ பல்கலைக் கழக மாணவர்கள் 9 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் 15 எருமை மாடுகளும் சம்பவ இடத்திலேயே பலியாகின.

படுகாயமடைந்த 9 பல்கலைக்

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலைக்கு ஆள்தேவை

கணனி தட்டெழுத்தில் அனுபவமுள்ள/ பழக விரும்பும் பெண்கள் வேலைக்குத் தேவை. 0779005856, 0718565540. ஹாட்வெயர் பெயின்ற் நிறுவனத்தில் பணிபுரிய அனுபவமுள்ள/ பழக விரும்பும் ஆண்கள் தேவை. 0777391450 நேரில் வரவும்.

தொடர்பு: அபிஷேக் மஸ்ரி ஸ்பொட்
இராமநாதன் கல்லூரி முன்பாக,மருதனார்மடம்.


# வாள்வெட்டு மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பில் மேலும் மூவ ரைக் கைது செய்துள்ளதாக, அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏற்கெனவே, மூவர் கைதாகி விளக்கம றியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சம்ப வத்துடன் தொடர்புடைய மேலும் மூவர், நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ள னர்.

கடந்த 15 ஆம் திகதி, அச்சுவேலி தெற்குப் பகுதியினைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் ஆவரங்கால் நாவோதயா பகுதியினைச் சேர் ந்த இளைஞர்களுக்கு இடையில் இடம்பெற்ற கைகலப்பில் ஐவர் படுகாயமடைந்தமை குறி ப்பிடத்தக்கது. (11)

# பேருந்து சாரதி மீது வவுனியாவில் தாக்குதல்!

(குருமன்காடு)

வவுனியாவில் நேற்று மாலை 3.30 மணியளவில் அரச பேரு ந்து சாரதி ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டதில் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலை விபத்துப்பிரிவில் அனுமதிக்கப்ப ட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா அரச பேருந்தில் சாரதியாக கடமையாற்றும் குறித்த நபர் நேற்று பணிக்கு லீவு போட்டுவிட்டு மாலை 3.30 மணியளவில் வவுனியா இலுப்பையடி பேருந்து தரிப்பிடத்திலிருந்து சுந்தரபுரம் செல்லும் பேருந்தில் ஏறி காத்திருந்துள்ளார்.

இதன் போது ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவினர் பேருந்துக்குள் ஏறி குறித்த சாரதியை கடுமையாக தாக்கியுள்ளனர். இதில் படுகாயம டைந்த சாரதி உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் தொடர்பாக வவுனியா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (250)


## கண்ணீர் அஞ்சலி

யா/கொக்குவில்
இந்துக்கல்லூரியின்
ஆங்கில ஆசிரியர்
அமரர் திருமதி
**கௌரிமனோகரி**
**பவளநாதன்**



அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திக்குழு
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
கொக்குவில்

(சி-7406)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பதவி வெற்றிடம்

- செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு (இருபாலாரும்)
- விளம்பர வடிவமைப்பு (இருபாலாரும்)

தகைமையும் தொடர் சேவையும் பத்திரிகைத்துறை விருப்பமும் கொண்டவர்கள் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் 01.02.2017 புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

**இல.3, 2-ம் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே : 021 567 1532**

பொது முகாமையாளர்,
வலம்புரி


### விசேட அறிவித்தல் - தேசிய சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும் 2017 (NRCEIM -2017)

தேசிய சுதேச மருத்துவ மாநாடும் சித்த மருத்துவ கண்காட்சியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்தமருத்துவ அலகில் 27.01.2017 (வெள்ளிக்கிழமை) முதல் இடம்பெற்று வருகிறது.

மேற்படி சித்தமருத்துவ கண்காட்சியானது பாடசாலைகளினதும் பொதுமக்களினதும் கோரிக்கைகளுக்கு அமைவாக எதிர்வரும் இரண்டு நாட்கள் 30.01.2017 (திங்கட்கிழமை) மற்றும் 31.01.2017 (செவ்வாய்க்கிழமை) வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (சி-7398)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 01.01.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர்
**சீனியன் சிவமூர்த்தி**
(கரவெட்டி பிரதேசசபை உத்தியோகத்தர்)

அன்னை மடியில் : 15.03.1962
ஆண்டவன் மடியில் : 01.01.2017

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை 31.01.2017 செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

பிரமணந்தோட்டம்,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (சி-7395)

- குடும்பத்தினர்
077 869 3932

## கண்ணீர் அஞ்சலி

யா/கொக்குவில்
இந்துக் கல்லூரியின்
ஆங்கில ஆசிரியை
திருமதி
**கௌரிமனோகரி**
**பவளநாதன்**



அவர்கள் காலமானதை யிட்டு ஆழ்ந்த துயரமடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கல்லூரியின் சார்பில் அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
கொக்குவில்

(சி-7405)

## கண்ணீர் அஞ்சலி

**E.S.P. கணேசலிங்கம்**



கொடைக்கோ E.S.P. நாகரட்ணம் அவர்களின் பாசமிகு சகோதரன் E.S.P. கணேசலிங்கம் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பேராசிரியர் க.தேவராசா குடும்பத்தினர்,
சண்.வாமதேவன் குடும்பத்தினர்,
சரா.புவனேஸ்வரன் குடும்பத்தினர்,
ஞான.திருக்கேதீஸ்வரன் குடும்பத்தினர்,
V.தயாபாலன் குடும்பத்தினர்,
S.ஜெகபாலன் குடும்பத்தினர்,
S.பிரேம்குமார் குடும்பத்தினர்,
கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பு,
K.T.C கோண்டாவில்,
விக்னேஸ்வரா கல்வி நிலையம் கொக்குவில்,
சயன்ஸ் அக்கடமி நல்லூர்,
பொற்பதி அறிவாலயம் கொக்குவில்

(சி-7407)


அதிகளவு மாத இறுதி சேமிப்புக்காக
அதி குறைந்த விலைகள்
காகில்ஸ் புட்சிட்டி இடமிருந்து மட்டுமே!
புத்தம்புது உற்பத்திகளுக்கான சலுகைகள் 2017 ஜனவரி 29 வரை மட்டுமே.
பெரிய வெங்காயம் ரூ. 47/500g
போஞ்சி ரூ.37.00 ரூ. 29/500g
லீக்ஸ் ரூ.29.00 ரூ. 28/500g
பீட்ரூட் ரூ.45.00 ரூ. 38/500g
வட்டக்காய் ரூ.27.00 ரூ. 26/500g
கோவா ரூ.9.00 ரூ. 8.50/500g
கத்தரிக்காய் ரூ.42.00 ரூ. 37/500g
அன்னாசி ரூ.124.50 ரூ. 94/500g
ஹைபிரிட் மெலன் ரூ.26.00 ரூ. 25/500g
USA சிவப்பு ஆப்பிள் ரூ.212.12 ரூ. 189/500g
இறால் நடுத்தரவு ரூ.528.50 ரூ. 449/500g
சீலாவா சிறியவை ரூ.380.00 ரூ. 319/500g
சாலை ரூ.43.00 ரூ. 42/500g
அனைத்து சலுகைகளும் 2017 ஜனவரி 27 முதல் பெப்ரவரி 02 வரை மட்டுமே.
ரூ.135.00 ரூ. 125.00 சுப்பிரி கீரி சம்பா 1kg**
ரூ.169.00 ரூ. 165.00 பாஸ்மதி அரிசி 1kg**
ரூ.258.00 ரூ. 229.00 கடலை 1kg**
MY CHOICE MACKEREL
ரூ.138.00 ரூ. 125.00 மை சொய்ஸ் மெக்கரல் 425g**
ரூ.300.00 ரூ. 275.00 நெஸ்டமோல்ட் சுப்பர் சுப்பர் பக்கற் 400g
ரூ.400.00 ரூ. 359.00 Fortune மரக்கறி எண்ணெய் 1 Ltr
ரூ.220.00 ரூ. 187.00 வட்டவல தேயிலை 200g
ரூ.195.00 ரூ. 165.00 மெகி நூடில்ஸ் பெமிலி பக்கற் 420g
ரூ.760.00 ரூ. 608.00 செம்ஸ் ப்ரென்ச் ப்ரைஸ் 1kg
ரூ.520.00 ரூ. 416.00 கிஸ்ட் மிக்ஸ்ட் ப்ரூட் கோடியல் 750ml
ரூ.250.00 ரூ. 199.00 கிஸ்ட் பெஷன் நெக்டார் 1 Ltr
ரூ.220.00 ரூ. 198.00 கொத்மலே பால் வெனிலா / சொக்லட் 1 Ltr
ரூ.398.00 ரூ. 358.00 ஹெப்பிகவ் ஸ்லைஸஸ் அல்பைன் 150g
ரூ.335.00 ரூ. 268.00 கிஸ்ட் மிக்ஸ்ட் ப்ரூட் ஜாம் 510g
ரூ.560.00 ரூ. 504.00 செம்ஸ் சிக்கன் சொசேஜஸ் 500g
ரூ.295.00 ரூ. 236.00 பெலன்டைன் பட்டர் (உப்பு சேர்த்த) 125g
ரூ.420.00 ரூ. 357.00 பிரிங்கில்ஸ் ஒரிஜினல் 110g
ரூ.190.00 ரூ. 169.00 கிஸ்ட் சொக்லட் கிறீம் பிஸ்கட்ஸ் 400g
ரூ.435.00 ரூ. 348.00 பாரக்கா ஜொயின்ட் சேஃப் கெப்சூல்ஸ்
ரூ.155.00 ரூ. 124.00 டீபோல் டிஷ்வொஷ் ஜெல் 500ml
ரூ.220.00 ரூ. 187.00 பேபி செரமி ப்ளவர்ஸ் சோப் 5's 375g
ரூ.150.00 ரூ. 127.00 டிவா ப்ளவர்ஸ் ரோஸ் அன்ட் லைம் 1kg
Clogard
ரூ.130.00 ரூ. 109.00 க்லோகாட் பற்பசை 160g
ரூ.213.00 ரூ. 169.00 பென்டீன் ஹெயார்போல் கண்ட்ரோல் ஷாம்பூ 70ml
ரூ.113.00 ரூ. 96.00 ஜிலெட் ப்ளூ 2 ப்ளஸ் ரேஸர் 2
ரூ.383.00 ரூ. 306.00 ஜிலெட் ஷேவ் போம் ரெகுலர் 100ml
ரூ.185.00 ரூ. 148.00 ஹார்பிக் 10X 500ml
ரூ.120.00 ரூ. 89.00 ப்ளோரா பேப்பர் செர்வியட் 1ply 100's
குறித்த விலைகள் மற்றும் சலுகைகள் முன்னறிவித்தல் இன்றி மாற்றப்படலாம். **அதிகபட்சம் 3 அலகுகள் / Kg மட்டுமே. இருப்பு உள்ளவரை மட்டுமே. நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
காகில்ஸ் லோயல்டி மெம்பர்களுக்கு
30% கழிவு
2017 ஜனவரி 20 முதல் பெப்ரவரி 02 வரை மட்டுமே.
ரூ.240.00 ரூ. 168.00 கிஸ்ட் ஆப்பிள் நெக்டார் 1Ltr
Goldi Chicken Sausages
ரூ.1025.00 ரூ. 717.50 கோல்டி சிக்கன் சொசேஜஸ் 1kg
ரூ.420.00 ரூ. 294.00 வட்டவல தேயிலை 400g
Horlicks
ரூ.395.00 ரூ. 276.50 ஹோர்லிக்ஸ் 400g
Nestle Corn Flakes
ரூ.495.00 ரூ. 346.50 நெஸ்லே கோர்ன் ப்ளேக்ஸ் 275g
KIST Absolute JUICE nothing BUT Orange
ரூ.350.00 ரூ. 245.00 கிஸ்ட் அப்சலூட் ஒரேஞ்ச் ஜூஸ் 1Ltr
KIST Cheese Cutz
ரூ.340.00 ரூ. 238.00 கிஸ்ட் சீஸ் கட்ஸ் டின் 210g
ரூ.590.00 ரூ. 413.00 டர்க்கி சன்பிளவர் எண்ணெய் 1Ltr
ரூ.505.00 ரூ. 353.50 கோல்டி சிக்கன் விங்குஸ் 500g
BON AROMA
ரூ.1170.00 ரூ. 819.00 போன் அரோமா க்ளாசிக் கோப்பி 200g
KIST Vanilla Wafers
ரூ.200.00 ரூ. 140.00 கிஸ்ட் வெனிலா வேபர்ஸ் 450g
ரூ.156.00 ரூ. 109.20 Clogard க்லோகாட் ஜெல் பற்பசை ஹெர்பல் அன்ட் அலோவேரா 120g
சலுகைக் காலத்தில் ஒரு உற்பத்தியில் அதிகபட்சம் 3 அலகுகள் மட்டுமே. இருப்பு உள்ளவரை மட்டுமே. நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
Cargills food city
வீடு செல்லும் போது
யார் என்ன சொன்னாலும் வருடம் முழுதும் குறைந்த விலை மற்றும் அதிக சேமிப்பை தருவது காகில்ஸ் புட்சிட்டி மட்டுமே

# நீர்வள நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும்

## அமைச்சர் ஐங்கரநேசன் வலியுறுத்து

வடக்கு மாகாணம் இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் இருந்து வேறுபட்ட தரைத்தோற்ற அமைப்பையும் வேறுபட்ட காலநிலையையும் வேறுபட்ட நீர்முலங்களையும் கொண்டது. எங்களிடம் நீர்வீழ்ச்சிகளோ பேராறுகளோ இல்லை. இவற்றின் பின்னணியில் நாம் எதிர்கொண்டுள்ள நீர்வள நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு எமது மாகாணத்துக்கான தனியான ஒரு நீரியல் கொள்கையின் அவசியம் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கமைவாகவே, வடமாகாண நீர்வள அபிவிருத்தி ஆய்வரங்கு தற்போது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண நீர்வள அபிவிருத்தி தொடர்பான மூன்று நாள் ஆய்வரங்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது. வடக்குமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த ஆய்வரங்கின் தொடக்க நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்தார். எமது நீர வளம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கு சரியான தீர்வுகளைத் கண்டடையாமற் போனால் நாமும் எமது சூழலும் பாரிய பாதிப்புகளைச் சந்திக்க நேரும். இதனைக் கருத்திற் கொண்டே வடக்கு மாகாணத்தின் நீர் வளங்களை நிலைத்து நிற்கும் வகையில் மீட்டெடுப்பதற்கான, பாதுகாப்பதற்கான, பங்கிடுவதற்கான, முகாமை செய்வதற்கான ஒரு நீரியல் கொள்கையை உருவாக்கும் முயற்சியில் நாங்கள் இன்று இங்கு இணைந்திருக்கிறோம என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கே கலாசார நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன

## அமைச்சர் நாவின்ன தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கில் உள்ள மக்களிடையே இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கே கலாசார நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன என உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள புற்றளைப் பகுதியில் அமைக்கப்பட்ட கலாசார மத்திய நிலையத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலாசார நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே ஒருமைப்பாட்டினை பாதுகாக்க முடியும். இன்னும் மூன்று கலாசார மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. தற்போது தேசிய அரசாங்கம் ஒன்று உள்ளது. அதில் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த ரணிலும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேனவும் தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த சம்பந்தனும் முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சர் விஜயகலாவும் உள்ளமை பெருமையாகவுள்ளது.

இலங்கையில் அமைக்கப்பட்ட 177ஆவது கலாசார மத்திய நிலையம் இதுவாகும். மேலும் சாவகச்சேரி, கரவெட்டி சண்டிலிப்பாய் போன்ற இடங்களில் இன்னும் மூன்று கலாசார மத்திய நிலையம் திறந்து வைக்கப்படும்.

40 வருடத்திற்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்தேன். தற்போது யுத்தம் முடிந்த பின் இங்கு வந்தபோது மூவின மக்களும் ஒன்றிணைந்திருப்பதைக் காண முடிகிறது.

சார்க் அமைப்பு நாடுகள் இணைந்து பெரிய கலாசார மத்திய நிலையம் ஒன்றினை அமைக்கவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3,60)

# நூல் வெளியீட்டு விழா

1979 இல் இருந்து கூட்டுறவில் கடந்து வந்த பாதை நூல்வெளியீட்டு விழாநாளை 31ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.

வடமாகாண ஆளுநர்செயலக உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், யாழ். கூட்டுறவு ஆ.உ. ஆணையாளர் பொ.மோகன், கரைச்சி பிரதம செயலர் கோ.நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)




# இயற்கைவள முகாமைத்துவம் குறித்து இன்று கலந்துரையாடல்

இலங்கை பொறியியலாளர் நிறுவகம், யாழ்.முகாமையாளர் சம்மேளனம் ஆகியன இணைந்து நடத்தும் சமூக அபிவிருத்தியில் பொறியியல் துறையும், இயற்கைவள முகாமைத்துவமும்(நீர் முகாமைத்துவம்) தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு இல.17, விவசாயக் கந்தோர் வீதி, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் பொறியியலாளர் விக்கி விக்னேஸ்வரன் (அவுஸ்திரேலியா) கலந்து கொண்டு உரையாற்றுவார். இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களுக்கு இணைப்பாளர் வி.நிரஞ்சனின் 077 304 3206 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# இதயநிறைவு தியானப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான பூர்வமான அணுகுமுறை கொண்ட இதய நிறைவு தியானப்பயிற்சி இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் 161.முதலாம் குறுக்குத்தெருவிலுள்ள சென் ஜோன் அம்புலன்ஸ் மண்டபத்தில் நடைபெறும்.

இந்தியா ஸ்ரீராம் சந்த்ர மிஷன் இணைச்செயலாளரும் பயிற்றுவிப்பாளருமான ஏ. பி. துரை இலவசமாக இத்தியானப்பயிற்சியை நிகழ்த்தவுள்ளார்.

வயது வந்தவர்கள் வீடுபேறு நிலையை அடையவும், தொழில்புரிவோர் தமது தொழிலைத் திறம்படச் செய்யவும், மாணவர்கள் கல்வியில் மேலோங்குவதுடன், ஒழுக்கசீலர்களாக மிளிர்ந்து மக்களின் போற்றுதலுக்காளாகவும், இந்தத் தியான முறையைப் பயிற்சி செய்து பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)



ஆனைக்கோட்டை சாவற்காடு அருள்வளர் கெங்காதேவி அம்மன் ஆலய புனருத்தாரண அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. இவ் அடிக்கல்லினை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நாட்டி வைத்தார். (படம் -கரணவாய் செய்தியாளர்)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ். புன்னாலைக் கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் த.லோகராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா, சிறப்பு விருந்தினராக விக்கிரமரத்னா குறூப் கம்பனியின் யாழ். கிளை முகாமையாளர் அனுர ரணசிங்க, கௌரவ விருந்தினராக யா/ வட்டு இந்துக்கல்லூரி ஆசிரியர் ரி.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3,78)

# விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்பம் ஏற்றுமதி வாய்ப்புக்களை அதிகரிக்க உதவும்

## உலக வங்கி பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

விவசாயத் துறையில் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி வாய்ப்புக்களைப் பெற முடியும் என உலகவங்கி பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அன்னா டொனேல் தலைமையிலான உலக வங்கி பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அதில், இலங்கையின் விவசாய ஏற்றுமதி தொடர்பான பல முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. இதன் போதே உலக வங்கி பிரதிநிதிகளால் மேற்கண்டவாறு கருத்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு கொண்டு சேர்க்கும் வகையில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதுடன் உள்நாட்டு விவசாயம், கால்நடை, மீன்பிடி ஆகிய விவசாயத் துறையின் வெளியீடுகளை இரு மடங்காக்கி, சர்வதேச சந்தை வாய்ப்பினை பெறும் நோக்குடன் பல செயற்றிட்டங்கள் அமைச்சுக்கள் ஊடாக நடைபெற்று வருகிறது.

இலங்கையின் விவசாயத் துறையை நவீனமயப்படுத்தும் பொருட்டு சுமார் 121 மில்லியன் டொலர் கடன் உதவியினை வழங்க உலக வங்கி அரசுடன் கைச்சாத்திட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையின் விவசாய தொழிலானது காலநிலை மாற்றங்களிற்கும், சூழலுக்கு ஏற்றதாகவும், சிறப்பான சந்தையினைப் பெற்று, ஓர் கவர்ச்சிகரமான வணிகத் தொழிலாகவும் மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் விவசாயத்துறை கடந்த காலங்களில் இருந்து பல பரிமாண வளர்ச்சியினைக் கண்டு வருகின்றது. இதன் ஒரு மைல்கல்லாக அரிசி உற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளது. ஆயினும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதமாக உள்ள விவசாய உற்பத்திகளைப் பெறுவதற்கு, நாட்டின் மொத்த தொழிலாளர்களில் 30 சதவீதமானவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த சமத்துவமற்ற நிலையினை நீக்கி, கிராமிய பொருளாதாரத்தினை முன்னேற்றி, ஒரு நடுத்தர உயர் வருமானம் பெறும் நாட்டிற்கான நவீன வேளாண்மை தொழிலை வழங்குவதற்கு நிதி அமைச்சும், உலக வங்கியும் இணைந்து செயலாற்ற உள்ளன.



இலங்கையின் விவசாயத் துறையில் குறிப்பாக நெல் சாகுபடியில் இன்னும் பாரம்பரிய முறைகளே பின்பற்றப்படுகிறது. இவற்றில் சிலவற்றை தொடர்ந்தும் பாதுகாத்துக் கொள்வதுடன், நவீன தொழில்நுட்ப பயன்பாடுகளின் மூலம் பெறுமதி கூட்டல்களைச் செய்வதன் ஊடாக ஏற்றுமதி வாய்ப்புக்களைப் பெற முடியும். இந்த மாற்றமானது, வருமான அதிகரிப்பு, வறுமைத் தணிப்பு, சமத்துவமின்மையில் குறைப்பு, சிறந்த ஊட்டச்சத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற பல நன்மைகளை அடைய முடியும்.

இவை தவிர, விவசாய உற்பத்திகளில் அதிக மதிப்பினைக் கொண்ட பழங்கள், காய்கறிகள் தொடர்பாக விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும். விவசாயத்தில் நவீன தொழில்நுட்ப பாவனைகளுடன், விவசாயி - விவசாய வர்த்தக அமைப்புக்களின் கூட்டு முயற்சி என்பது விவசாயத் துறையினை முன்னேற்றும். இதன் பொருட்டு விவசாயத் துறையில் உள்ள குறுநில விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள் ஆகிய நலிவுற்ற சமூகத்திற்கு நல்ல தொழில் வாய்ப்பினை வழங்கும் வகையில் நிவாரண, நிறுவன ரீதியான ஏற்பாடுகளை உலக வங்கி மேற்கொண்டுள்ளது.


இந்த செயற்றிட்டங்கள் வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா உள்ளிட்ட 5 மாகாணங்களில், விவசாய மற்றும் கைத்தொழில் அமைச்சுக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படும். இதனால், சுமார் 30 ஆயிரம் குறுநில விவசாயிகள் பயனடைவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

# அமெரிக்கா தனது யுத்த படைமுகாமை திருகோணமலையில் அமைக்கத்திட்டம்

## முன்னாள் அமைச்சர் திஸ்ஸ எச்சரிக்கை

(கொழும்பு)

**அமெரிக்கா தனது யுத்த படைமுகாமை திருகோணமலையில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே அங்கு அமெரிக்காவின் யுத்தக் கப்பல்களும் வரவுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் எமது நாட்டின் சுதந்திரம் மற்றும் சுயாதிபத்தியம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண எச்சரித்துள்ளார்.**



அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையை நெருக்கடியான நிலைக்கு தற்போதைய ஆட்சியாளர்கள் கொண்டு செல்கின்றனர். தேசிய விடயங்கள் எதனையும் கருத்தில் கொள்ளாமல் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் எமது பரம்பரையினரே அதிகளவில் பாதிக்கப்படவுள்ளனர். நாட்டை அபிவிருத்தி செய்வதாகக் கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் பொருளாதார ரீதியில் பின்னடைவான நிலைக்கே கொண்டு செல்கின்றனர். அதனால்சர்வதேச நாடுகளும் இலங்கைமீது நம்பிக்கை இழந்துள்ளன. மேலும உலகளாவிய ரீதியில் ஊழல் நிறைந்த நாடுகளின் வரிசையில் தற்போது இலங்கை முன்னிலைக்கு வந்துள்ளது.

பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்தமையினால் தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். மேலும் கடந்த காலங்களில் மக்கள் போராடிப் பெற்றுக்கொண்ட சலுகைகளையும் இல்லாமலாக்குவதற்கு முயற்சிக்கின்றனர். இலவசக்கல்வி, சுகாதாரம் உள்ளிட்டவற்றையும் நீக்குவதற்கு ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## நுகேகொடையில் 18,000 பேரே; மகிந்தவுக்கு மீண்டும் தோல்வி

(கொழும்பு)



கூட்டு எதிர்க்கட்சி நுகேகொடையில் நடத்திய பொதுக் கூட்டம் தோல்வியடைந்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரான பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்கள் கலந்து கொள்வார்கள் எனக் கூறிவிட்டு, பின்னர் அமைச்சர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் எனக் கூட்டு எதிர்க் கட்சியினர் கூறியதன் மூலம் இது உறுதியாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நுகேகொடை கூட்டத்திற்கு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வருவார்கள் எனக்கூறப்பட்ட போதிலும் வெறும் 18 ஆயிரம் பேரே வந்ததாக அரச புலனாய்வு பிரிவு அறிக்கையளித்துள்ளதாகவும் அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்தார். (இ-3)

## கூட்டு எதிரணிக்கு அரசு எச்சரிக்கை

வீதிகளில் கூச்சலிடுவதால் தேசிய அரசாங்கத்தின் திட்டங்களை முடக்க முடியாது. எனவே கூட்டு எதிரணிக்கு அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் வாய்ப்புகள் தற்போதும் உள்ளது.

அதனால் உத்தேச அரசியலமைப்பு விவகாரத்தினை மக்களிடத்தில் திரிபுபடுத்தி காட்டி தவறான அர்த்தங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதை கூட்டு எதிரணி நிறுத்த வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

வீதிகளின் சந்திகளில் கூச்சலிடுபவர்களுக்கு அஞ்சி அரசாங்கம் தேசிய நல்லிணக்கத்திற்கான திட்டங்களையோ அபிவிருத்தி இலக்குகளையோ விட்டு பின்வாங்காது. அனைவருக்கும் எம்முடன் இணைந்து செயற்பட வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் எப்போதும் உண்டு.

புதிய அரசியலமைப்பு விவகாரம் என்பது இன்னும் பேச்சுமட்டத்தில் காணப்படுகின்ற ஒரு விடயமாகும். அதற்கு எதிராக குரல் எழுப்புகின்றவர்கள் அர்த்தமற்ற வகையில் கூச்சலிடுகின்றனரே தவிர ஆக்கபூர்வமான பங்களிப்புகள் எதனையும் அவர்கள் செய்வதில்லை.என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## இராசி பலன்

30.01.2017

(தை 17, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு

திருதியை பின்னிரவு 5.36 மணிவரை

சதயம் முன்னிரவு 11.59 மணிவரை

சுபநேரம் 12.36-2.06 மணிவரை

இராகுகாலம் 8.06-9.36 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| சந் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம்-ஆயிலியம் | | |
| சூரி புதன் | | | ராகு |
| | சனி | குரு | |

**மீனம்:** தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்:** பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** பகையொன்று நட்பாகலாம், தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், வழிபாட்டால் வளர்ச்சிகூடும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், தேகநலனில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**கடகம்:** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், வாழ்க்கைத் துணைவழியே சிறு சிறு மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், ரோகபயமுண்டு, பணவரவு திருப்திதரும் வகையில் அமையும், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கனவு பலிதமுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**தனுசு:** மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், குடும்பத்தில் குதுகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்கள் கைகூடும், மாதர் நட்புண்டு.

**துலாம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், வியாபார விருத்தியுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், தாய்வழி ஆதரவு பெருகும்.

**கன்னி:** கூட்டு முயற்சிகள் கைகூடும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
09.03.1951

மறைவு
29.01.2017



## அமரர் வல்லிபுரம்- சிவசூரியகுமாரன்
### (தவராசா- தொழிலதிபர்)

கரவெட்டி மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல தொழில் அதிபர் வல்லிபுரம்- சிவசூரியகுமாரன் (தவராசா) அவர்கள் 29.01.2017 நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- சிவகாமியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- வள்ளிப்பிள்ளையின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் பாசமிகு கணவரும், தயாபரன், சுகந்தினி, குமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவைகுகன், இராகுலன், சிவகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், வைஸ்ணவி, சக்தி, விபூஷா, சஞ்ஷைய், பபிஷன், ஆதேஷ், அகிலேஷ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.01.2017 இன்று திங்கட்கிழமை 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரவெட்டி மத்தி, கரவெட்டி.
077 234 7453

தகவல்:
குடும்பத்தினர்

# கமக்கார அமைப்புக்களின் பொதுக்கூட்டங்கள் நடைபெறும் கால அட்டவணை, நிர்வாகத் தெரிவு

## துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி )

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள கமக்கார அமைப்புக்களின் புனரமைப்புப் பொதுக்கூட்டங்கள் நடைபெறவுள்ள கால அட்டவணையை துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புக்களின் நடப்பாண்டுக்குரிய புதிய நிர்வாகத் தெரிவும், பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தென்னியங்குளம் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளிற்கும், அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு உயிலங்குளம் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும் முற்பகல் 11.30 மணிக்கு யோகபுரம் மேற்கு கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும் அந்தப் பகுதியில் உள்ள பொது நோக்கு மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

இதேபோன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்விளான் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும் முற்பகல் 10 மணிக்கு துணுக்காய் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும் முற்பகல் 11 மணிக்கு துணுக்காய் டீ, வாய்க்கால் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும், அந்தந்தப் பகுதியில் உள்ள பொது நோக்கு மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேறாங்கண்டல் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும், அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு ஆலங்குளம் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும் முற்பகல் 11 மணிக்கு மல்லாவி கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும் அந்தந்தப் பகுதியில் உள்ள பொது நோக்கு மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யோகபுரம் மத்தி கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும், அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு திருநகர் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும், முற்பகல் 11 மணிக்கு பாரதி நகர் கமக்கார அமைப்புக்களிற் குட்பட்ட விவசாயிகளிற்கும், அந்தந்தப் பகுதியில் உள்ள பொது நோக்கு மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

புத்து வெட்டுவான் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும், அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு, ஐயங்கன் குளம் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும் முற்பகல் 11 மணிக்கு பழைய முறிகண்டி கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும் அந்தப் பகுதியில் உள்ள பொது நோக்கு மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

இறுதியாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு யோகபுரம் கிழக்கு கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும், அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.30, மணிக்கு யோகபுரம் மத்திய கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும் அந்தப் பகுதியில் உள்ள பொது நோக்கு மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

எனவே விவசாயிகள் தங்கள் பகுதியில் நடைபெறவுள்ள கூட்டங்களுக்கு தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2- 15)




## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்களின் கல்விக்கு உதவிகள்



முல்லைத்தீவு முள்ளியவளை 3 ஆம் வட்டார பகுதியில் தாயை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 மாணவர்களின் கல்விக்கான தடைகளை நீக்கும் பொருட்டு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த குடும்பத்தினரின் வறிய நிலையை கருத்திலெடுத்த "நாளை முல்லைத்தீவு அமைப்பினர்" ஒரு துவிச்சக்கரவண்டி உட்பட பாடசாலை உபகரணங்களையும் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் வழங்கினார்கள்.

இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் கலந்து கொண்டதுடன் குறித்த உதவிகளையும் "நாளை முல்லைத்தீவு" உறுப்பினர்களுடன் இணைந்து வழங்கிவைத்தார்

அத்துடன் அக்குடும்பத்தின் வீட்டுத்திட்ட வீட்டை கட்டுவதற்கு அவர்களுக்கு இருக்கும் குறைகளையும் கலந்துரையாடினர். (2-312)

## அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க பிரசாரமும் கையெழுத்து சேகரிப்பும்




உள்ளூராட்சி அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் விழிப்புணர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான விழிப்புணர்வுத் திட்டத்தின் ஒருபகுதியாக ஒவ்வொரு மாவட்டங்களின் அனைத்து நகர் பகுதிகளிலும் கையெழுத்து சேகரிப்பு, விழிப்புணர்வுச் செயற்பாடுகள் என்பன இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இச்செயற்றிட்டத்தை மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையம் முன்னெடுத்து வருகின்றது.இச்செயற்றிட்டத்தின்கீழ் நேற்று முன்தினம் வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பிரதேசத்தில் இவ்வாறான பிரசாரமும் கையெழுத்து சேகரிப்பும் இடம்பெற்றது. (2-31[illegible])

## கோடாலிக்கல் குளக்கரையை அண்மித்த பகுதியில் சட்டவிரோத சமூக சீர்கேடுகள்

### சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு கோடாலிக்கல் குளக்கரையை அண்மித்த பகுதியில் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் நபர்கள் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேற்படி குளத்தை அண்மித்த பிரதேச விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தண்டுவான் - முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள கோடாலிக்கல் குளக்கரை பகுதியில் சட்டவிரோதமான மதுபானமும் கசிப்பு உற்பத்தி உட்பட சமூக சீர்கேடுகள்



நடைபெற்றுவருவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விடயத்தில் கூடிய கவனமெடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இயற்கை வளம் நிறைந்த குறித்த பிரதேசத்தை பாதுகாக்குமாறு விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)






கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு அண்மையில் நடைபெற்ற போது....
(படங்கள் - பூநகரி செய்தியாளர் )

# கோயில் தர்மகர்த்தாக்கள் மாணவர்களின் கல்வி செயற்பாட்டிற்கு உதவுவது மகத்தானது

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு





சோழர் காலத்தில் கோயில்கள் கல்விக்கூடங்களாகவும் கலைக் கூடங்களாகவும் திகழ்ந்தன என்று கூறுவார்கள். இன்று அந்தக் கோயில் தர்மகர்த்தாக்களே எம்மை நாடி வந்து எமது மக்களின் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கதே என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி , முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கல்வியை தொடர்வதற்கு வறுமைக்கோட்டின்கீழ்வாழும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் நேற்றுக் காலை 9.30 ம்ணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் 500 மாணவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தனது உரையில்,

இது முழுக்க முழுக்க மத்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும ஒரு கூட்டம். பிரதமரின் காரியாலயம், மத்திய அரசாங்க பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, மத்திய அரசாங்க நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரப்பு சேவைகள் அமைச்சு, கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஆகியன சேர்ந்து இதனை நடத்துகின்றது. பணத்தை மட்டும் மயூரபதி அம்மன் நலன்புரிச் சங்கத்தில் இருந்து கொடுத்துள்ளார்கள். ஒழுங்கமைப்பு மத்திய அரசாங்க அலகால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மாகாணசபையினூடாக நடத்தியிருந்தால் எங்கள் மனமகிழ்ச்சி இரட்டிப்பாக இருந்திருக்கும். ஆனால் எம்மக்களுக்கு நன்மை கிடைக்கின்றது என்றால் நான் அதற்கு முன்னுரிமை கொடுத்து வருபவன்.

எனினும் அரசியல் என்பது எப்பேர்ப்பட்டது என்பது இப்பொழுதுதான் தெரிந்து கொண்டு வருகின்றேன். பணம் கொடுப்பவர்கள் ஒரு சாரார். பலன் எடுப்பவர்கள் இன்னொரு சாரார். ஆனால் அந்தக் கைங்கரியத்தில் குளிர் காய்பவர்கள் மூன்றாந் தரப்பார். எங்களால் தான் உங்களுக்கு இது கிடைத்தது. ஆகவே அடுத்த தேர்தலில் எமக்கு வாக்குப் போடுங்கள் என்பார்கள் சிலர். அல்லது தமிழ் மக்களுக்கு நாம் செய்யும் சேவைகளை கண்ணுற்றீர்களா என்று ஜெனிவாவில் கேட்பார்கள் மறுசிலர்.

மாகாண முதலமைச்சரும் இதில் பங்கு பற்றியதால் வடக்கும் தெற்கும் இணைந்து விட்டது பார்த்தீர்களா? ஆகவே நல்லிணக்கம் ஏற்பட்டு விட்டது என்பார்கள் அவர்கள். இவையெல்லாம் எமது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு உரிய உரிமைகள் தரப்படாமலே கூறப்படுகின்ற கூற்றுக்கள். அதைத்தான் நான் இங்கு கூற வருகின்றேன்.

தென் ஆபிரிக்காவில் அரசியல் ரீதியான ஒரு தீர்வு பெற்ற பின்னரே உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இங்கு எம் மக்களுக்கு ஒரு சந்தேகம் உண்டு. மத்திய அரசாங்கம் அதைச் செய்து இதைச் செய்து விட்டு மக்களுக்கான நியாயமான அரசியல் தீர்வைத் தராது விட்டு விடுமோ என்ற ஒரு ஐயம் எம்மைப் பீடித்தே இருக்கின்றது. 1987 ஆம் ஆண்டில் இலங்கை இந்திய உடன்பாடு ஏற்பட்ட போது மாவட்ட செயலர் வடக்கு மாகாண அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார். எனவே இப்பேர்ப்பட்ட நடவடிக்கைகள் நடைபெறும் போது அவை எமக்குத் தெரிந்தே நடைபெற்றன. 1992 இல் உங்கள் எல்லோரதும் நண்பர் ஜனாதிபதி பிரேமதாச ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து மாகாண அரசாங்கத்தின் கீழ் இருந்த மாவட்ட செயலர், கிராம சேவையாளர் போன்றவர்களை மத்தியின் கீழ்க் கொண்டு வந்து விட்டார். அதனால் நர்வாகம் இரண்டாகப் பிளவுபட்டது. ஒன்று மத்திய அரசாங்கத்தின் கீழும் மற்றையது மாகாண அரசாங்கத்தின் கீழும் முன்னெடுக்கப்பட்டன. முன்னைய அரசாங்கத்தின் கீழ் மூடியவாறே செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நிலைமை சற்று சீரடைந்துள்ளது. வெளிபடைத் தன்மை சற்றுப் புலப்படுகின்றது.

சோழர் காலத்தில் கோயில்கள் கல்விக்கூடங்களாகவும் கலைக் கூடங்களாகவும் திகழ்ந்தன என்று கூறுவார்கள். இன்று அந்தக் கோயில் தர்மகர்த்தாக்களே எம்மை நாடிவந்து எமது மக்களின் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கதே.

இதன்போது மயூரபதி அம்மன் நலன்புரி சங்கத்தினால் குறித்த ஊக்குவிப்பு தொகை வழங்கி வைக்கப்பட்டது. இதனடிப்படையில் மாதாந்தம் தலா 1000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நிகழ்வில் சிறுவர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறுவர் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர், மாவட்ட செயலாளர், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2)




## மாங்குளத்தில் பேருந்து நிலையம் அமைக்குமாறு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு கடிதம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு, மாவட்டத்தின் மாங்குளத்தில் பேருந்து நிலையம் ஒன்றை அமைக்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குவடக்குமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மாங்குளத்தில் அமைக்கப்படும் பேருந்துகள் நிலையத்தின் ஊடாக முல்லைத்தீவு, துணுக்காய், வெள்ளாங்குளம், முழங்காவில் ஆகிய பகுதிகளுக்கு பேருந்து சேவைகளை ஈடுபடுத்த முடியும். மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குறிப்பாக பாடசாலை மாண வர்கள், ஆசிரியர்கள் போக்குவரத்து செய்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில் மாங்குளத்தில் பேருந்து நிலையம் அமைப்புதன்ஊடாக போக்குவரத்துகள் இலகு படுத்தப்படும்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திலே, போக்குவரத்து நெருக்கடிகள் மிகுந்த பகுதிகளாக மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் காணப்படுகின்றன. இப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள பேருந்துகள் பணியில் ஈடுபடாததன் காரணமாக பாடசாலைக்கு மாணவர்கள் நடந்தே செல்கின்றனர். மேலும் பிற மாவட்டங்களில் இருந்து துணுக்காய், மாந்தை கிழக்குப் பகுதிக்கு, பணிக்கு வரும் உத்தியோகத்தர்கள் மாங்குளத்தில் நீண்ட நேரம் காத்திருந்தே பேருந்துகளில்பயணிக்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

இது தொடர்பாக 2010 ஆம் ஆண்டில் இருந்து பிரதேச, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக போக்குவரத்து நெருக்கடிகள் தொடர்வதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. (2-281)

### கமக்கார அமைப்புக்களின் ஊடாக

# உரமானியக் காப்புறுதி இழப்பீட்டை பெறுவதற்கான படிவங்கள் விநியோகம்

## ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி )

ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்தின் கீழ் 2016 - 2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையின் போது, வரட்சி காரணமாக 2 ஆயிரத்து 874, விவசாயிகளின் 8 ஆயிரத்து731 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ள நிலையில், விவசாயிகளுக்கான உரமானியக் காப்புறுதிக்கான இழப்பீட்டை பெற்றுக் கொடுப்பதற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கு கமக்கார அமைப்புக்களுக்கு ஊடாக விவசாயிகளுக்கு படிவங்களை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டான்கமநல சேவை நிலையத்தின் கீழ் முத்தையன் கட்டுக்குளத்திற்குட்பட்ட ஆயிரத்து 126, விவசாயிகளின் 3476.75 ஏக்கரிலும், சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் 865, விவசாயிகளின் 2894.5, ஏக்கரிலும், மானாவாரியாக 863, விவசாயிகளின் 2 ஆயிரத்து 360 ஏக்கருமாக, மொத்தம் 2874, விவசாயிகளின் 8 ஆயிரத்து731.25, ஏக்கர் காலபோக நெற்செய்கை அழிவடைந்துள்ளது.

இவ்வாறான நிலையில் இவர்களுக்கான உரமானியக் காப்புறுதிக்கான இழப்பீட்டை பெற்றுக் கொடுப்பதற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கு 31 கமக்கார அமைப்புக்களிற்கு ஊடாக இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் வைதது கமக்கார அமைப்புக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதனை கமக்கார அமைப்புக்கள் தாங்கள் பகுதியில் உள்ள 2016 - 2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையினை மேற்கொண்டு உரமானியக் கொடுப்பனவை பெற்றுள்ள விவசாயிகளில் வரட்சி காரணமாக நெற்செய்கை அழிவடைந்துள்ள விவசாயிகளிடம் விண்ணப்பங்களை வழங்கி அவர்கள் அதனை பூரணப்படுத்தியதன் பின்னர் மீளவும் பெற்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

எனவே அழிவை ' எதிர்நோக்கிய விவசாயிகள் கால தாமதம் செய்யாமல் விண்ணப்பங்களை பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்கவும்.

குறித்த காலப்பகுதியில் விண்ணப்பிக்கத் தவறும் விவசாயிகளின் விண்ணப்பங்களை கொழும்பிற்கு அனுப்பப்படவுள்ள உரமானியக் காப்புறுதிக்கான இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கான விபரப்பட்டியலில் இணைந்துகொள்ள முடியாத நிலை ஏற்படும் என்பதை விவசாயிகள் கவனத்தில் கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# வாழ்க்கை மாற்றிகள்!

நமது ஒட்டுமொத்த வாழ்க்கையையே புரட்டிப்போடும் அளவிற்கான பெரிய நிகழ்வுகள் மனித வாழ்வில் நடப்பதுண்டு. அதேசமயம், நமது ஒட்டுமொத்த வாழ்விற்கான மாற்றங்களைக் கொண்டுவரும் காரணிகளாக சின்னச் சின்ன நிகழ்வுகளும், தருணங்களும் உண்டு. அப்படியான விடயங்களைக் கொண்டு, சிறு சிறு சம்பவங்களாக உருவாக்கப்பட்டு, "ராபர்ட் சுல்லெர்" அவர்களால் எழுதப்பட்டதே "லைப் சேஞ்சர்ஸ்" என்னும் இந்தப் புத்தகம்.

**சிக்கலற்ற திட்டம்!?**

எந்தவொரு பிரச்சினைக்கும் பூரணமான திட்டம் என்ற ஒன்று இல்லை என்கிறார் ஆசிரியர். அதாவது, ஒவ்வொரு திட்டமும் அதற்கே உரித்தான சிக்கலுடன் சேர்ந்தே இருக்கின்றது. மேலும், இதனை ஒரு நிகழ்வின் மூலம் விளக்கியுள்ளார் ஆசிரியர்.

ஒருவனுக்கு அழகிய முத்து ஒன்று கிடைக்கின்றது. ஆனால் அதன் ஒரு பகுதியில் சிறு குறைபாடு உள்ளதைக் காண்கிறான். அதை நீக்கிவிட்டால், இது இன்னும் அழகாகவும், விலைமதிப்பற்றதாகவும் மாறிவிடும் என நினைக்கிறான். அதனால் அந்த முத்தின் முதல் அடுக்கினை நீக்கிவிடுகிறான். ஆனால், அக்குறைபாடு சரியாகாமல் தொடர்ந்து இருப்பதைக் காண்கிறான். பிறகு அதன் இரண்டாவது அடுக்கினையும் நீக்கிவிடுகிறான். இப்பொழுதும் அந்த சிறிய குறைபாடு அப்படியே இருக்கின்றது. தொடர்ந்து ஒவ்வொரு அடுக்காக நீக்கிக்கொண்டே வருகிறான். இறுதியில் ஒட்டுமொத்த முத்தையும் இழந்து ஏமாற்றமடைகிறான்.


**இன்றைய நிலை!?**

நமக்கு ஒரு பிரச்சினை ஏற்படுகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த பிரச்சினைன்யை ஒரே கண்ணோட்டத்தில் மட்டுமே அணுகாமல், அதன் தற்போதைய நிலையை சரியாக கண்காணித்து செயல்படும்போது மட்டுமே அதிலிருந்து மீண்டு வர முடிகின்றது. அதாவது, பிரச்சினையின் நேற்றைய நிலையானது இன்றைய நிலையிலிருந்து மாறுபட்டதாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். அதற்கான மாற்றங்களை நமது அணுகுமுறையில் கொண்டுவர வேண்டும்.

காட்டிலிருந்து பிடிக்கப்படும் யானை, எவ்வாறு பழக்கப்படுத்தப்படுகிறது என்பதை அறிந்திருப்பீர்கள். பிடிக்கப்படும் யானை வலிமையான நீண்ட சங்கிலியால் கால்களில் கட்டப்பட்டு, அதன் மறுமுனை பெரிய மரத்தில் பிணைக்கப்பட்டிருக்கும். பிடிபட்ட ஆரம்ப நாட்களில், சங்கிலியிலிருந்து விடுபட தொடர்ந்து யானை முயன்று கொண்டே இருக்கும். தன் கால்களை அசைத்து அசைத்து முயன்று. நாட்கள் செல்ல செல்ல இனி ஒன்றும் பயனில்லை என்ற முடிவுக்கு வந்து விடும். அதன்பிறகு அந்த யானைக்கு பெரிய மரமோ அல்லது வலிமையான சங்கிலியோ தேவையில்லை. சிறிய இரும்பு கம்பியில் கட்டப்பட்டிருந்தாலும், தான் இன்னும் பழைய படி பெரிய மரத்திலேயே கட்டப்பட்டிருப்பதாக எண்ணி, அது விடுவிப்பதற்கு எவ்வித முயற்சியையும் எடுக்காது. நிகழ்கால நிலையை அறியாதிருப்பின், கடந்தகால வருத்தத்துடனே வாழ வேண்டியிருக்கும்.

**வெற்றியின் இரகசியம்!?**

வளர்ப்பு பிராணிகளுக்கான உணவுப்பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று, நாய்களுக்கான உணவுப்பொருள் ஒன்றை புதிதாக தயாரித்தது. அனைத்து விதமான புரோடீன்ஸ், மினரல்ஸ், கார்போ ஹைட்ரேட்ஸ் மற்றும் கொழுப்புச்சத்து ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது அது. அழகான பேக்கேஜ் மற்றும் போட்டியாளர்களை விட குறைவான விலை என சிறப்பாக தயாரானது அப்பொருள். தனித்துவமான முழு பக்க பத்திரிகை விளம்பரம் மற்றும் அதிக செலவிலான தொலைக்காட்சி விளம்பரங்களுடன் சந்தைப்படுத்தப்பட்டது அந்த உணவு.




மெதுவாக விற்பனையை தொடங்கிய அப்பொருள், ஆறு மாத காலத்திற் குள்ளாகவே விற்பனையில் மோசமான நிலையை சந்திக்க நேர்ந்தது. இதனால் நிறுவன தலைவர், அனைத்து மாவட்ட விற்பனை மேலாளர்களுடனான சிறப்பு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். தரமான, விலைமலிவான, சிறந்த விளம்பரத்துடன் வெளியான பொருள், ஏன் விற்பனையில் சோபிக்கவில்லை என்ற கேள்வி அனைவரிடமும் கேட்கப்பட்டது. சிறிய நிசப்தத்திற்குப் பிறகு ஒருவர் மட்டும் நிறுவன தலைவரிடம் சென்று, நமது பொருளை நாய்கள் விரும்பவில்லை என்று கூறினாராம்.

ஆக, வெற்றிக்கான ரகசியம் சொகுசான அலுவலகத்தில் அமர்ந்துகொண்டு திட்டமிடுதலில் இல்லை. என்ன தேவை என்பதை அறிந்துகொண்டு, பிறகு அதற்காக செயல்படுவதிலேயே வெற்றி அடங்கியிருக்கின்றது என்கிறார் ஆசிரியர். காயத்தைக் கண்டறிந்து குணப்படுத்துவதும், சிக்கலைக் கண்டறிந்து தீர்வளிப்பதுமே வெற்றிக்கான ரகசியமாகும்.

**நினைவில் வைப்போம்!?**

நமக்கு ஏற்பட்ட சிறந்த நிகழ்வுகளை அவ்வப்போது நினைவில் கொண்டு வருவது மிகச்சிறந்த வலிநிவாரணி என்கிறார் ஆசிரியர். ஆம், சிறந்ததை எண்ணிப்பார்க்க வேண்டுமே தவிர, இழந்ததை ஒருபோதும் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடாது. அதாவது மோசமான நிகழ்வுகளை மறந்து, நல்ல நிகழ்வுகளை நினைத்துப்பார்க்க வேண்டும்.

ஒரு சிறிய நோட்புக்கில், உங்களது தினசரி நிகழ்வுகளில் உங்களை அதிகம் மகிழ்ச்சியடைய வைத்த தருணங்களை மட்டும் குறித்துக்கொள்ளுங்கள். காலை உணவில் உங்களுக்கு பிடித்த பதார்த்தம், சந்தித்த நபர்களில் உங்களை சந்தோஷப்படுத்தியவர், சினிமாவில் உங்களுக்குப் பிடித்த காட்சி, படித்ததில் உங்களைக் கவர்ந்த கருத்துகள் என அனைத்து நல்ல விடயங்களையும் பட்டியலிடுங்கள். அன்றைய நாளின் முடிவிலோ அல்லது குறிப்பிட்ட சில நாட்கள் இடைவெளியிலோ அல்லது துன்பமான நேரங்களிலோ இவற்றின் மீது பார்வை செலுத்துங்கள், அப்பொழுது இதன் மதிப்பு உங்களுக்கு தெரியவரும்.

**மறைந்திருக்கும் செய்தி!?**

புதிதாக பல்பொருள் அங்காடி ஒன்றை தொடங்குகிறான் இளைஞன் ஒருவன். அதன் திறப்பு விழாவிற்காக தயாரான சமயத்தில், அதே பகுதியில் ஏற்கெனவே இவ்வகையான கடையினை நடத்திவரும் வியாபாரி ஒருவர், இளைனின் புதிய கடை தனது வியாபாரத்தைப் பெருமளவில் பாதிக்கும் என அச்சமடைகிறார். அதற்காக நன்கு ஆலோசித்து, உள்ளூர் செய்தித்தாளில் "ஐம்பது ஆண்டுகளாக வணிகம் செய்து வரும் எங்கள் கடையில் உங்களுக்கு தேவையான பொருட்களை வாங்குங்கள்" என்று விளம்பரம் செய்கிறார்.

இந்த விளம்பரத்தை கண்ட இளைஞன் கவலையடைகிறான். இந்தப் போட்டியை எவ்வாறு சமாளிப்பது? என்ன செய்வது? என்றெல்லாம் யோசித்து, அடுத்த வாரத்தில் அதே உள்ளூர் செய்தித்தாளில் "கடந்த ஒரு வாரம் மட்டுமே வணிகம் செய்துவரும் எங்களிடம் உங்களுக்கு தேவையான பொருட்களை வாங்குங்கள், அனைத்து விற்பனைப் பொருடகளும் புத்தம்புதியவை" என்று விளம்பரம் செய்து பதிலடி கொடுக்கிறான் அந்த இளைஞன். ஆக, ஏற்படும் இனனல்களுக்கு உள்ளேயும் நமக்கு தேவையான நல்ல விடயங்கள் மறைந்திருக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**மறைக்கப்படும் பகுதி!?**

உளவியல் பேராசிரியர் ஒருவர் தனது வகுப்பறையில் உள்ள பலகையில் ஒரு வெள்ளை காகிதத்தை ஒட்டுகிறார். அதில் ஒரு வட்டவடிவத்தை வரைந்து, அதில் கருப்பு வண்ணத்தை தீட்டுகிறார். பிறகு தனது மாணவர்களிடம், இதில் என்ன காண்கிறீர்கள்? என்று கேட்கிறார். ஒரு கருப்பு புள்ளியை பார்ப்பதாகவும், இருண்ட வட்டவடிவத்தை பார்ப்பதாகவும், கருப்பு தட்டு போன்றதைப் பார்ப்பதாகவும் தெரிவிக்கின்றனர் மாணவர்கள்.

இறுதியாக பேராசிரியர், காகிதத்தின் வெள்ளை நிறத்திலான பகுதி யாருக்கும் தெரியவில்லையா? என்று கேட்கிறார். ஆக, காகிதத்தில் உள்ள கருப்பு நிற பகுதியின் மீது மட்டுமே அனைவரது கவனமும் இருந்ததே தவிர, வெள்ளை பகுதியை ஒருவரும் கவனிக்கவில்லை. இதுபோலத்தான் பெரும்பாலானோர், சரியான விடயங்களை விட்டுவிட்டு தவறான விடயங்களின் மீதே தங்களது பார்வையை கொண்டிருக்கிறார்கள்.

நமக்கு ஏற்படும் நிகழ்வுகளின் வாயிலாக் கிடைக்கும் நல்ல விடயங்களே நமக்கான வாழ்க்கைப் பாடங்கள் என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

# வாடிக்கையாளர்களிடம் யோசனை கேட்காதீர்கள்

**தொழில் ரகசியம்**

(கடந்த வாரத் தொடர்ச்சி)

வங்கிக்கு செல்லாமல் ஊரெங்கும் ஏரிஎம் மெஷின்கள் திறந்து அதில் ஒரு கார்டை செலுத்தி நாலு நம்பரை அழுத்தி பணம் எடுக்கும் வசதியை செய்து தாருங்கள் என்று யாராவது வங்கிகளிடம் கேட்டார்களா? தேவைப்படும் போது பணம் கொடுக்க முடியாதா என்று வாடிக்கையாளர்கள் கோரசாய் குரல் கொடுத்ததால் அந்த தேவையை எப்படி பூர்த்தி செய்வது என்று வங்கிகள் யோசித்ததன் விளைவே ஊரெங்கும் இருக்கும் ஏரிஎம் இயந்திரங்கள்.

தங்களுக்கு என்ன தேவை, அதை பூர்த்தி செய்யும் பொருள் எப்படி இருக்கவேண்டும் என்று கற்பனை செய்து அதை விளக்குவது வாடிக்கையாளரின் வேலை அல்ல. அந்த திறனும் அவரிடம் இல்லை. இதை செய்யத்தான் சந்தைப்படுத்துநர். இதை செய்வதற்குத தான் சந்தைப்படுத்துதல். வாடிக்கையாளர்கள் தேவையை புரிந்து அதை நிறைவேற்றும் பொருள்களை தருவதில் தான் சந்தைப்படுத்தல் வெற்றி அடங்கியிருக்கிறது.

மக்கள் தேவையை பூர்த்தி செய்து, வெற்றி பெற்ற பொருள்கள் எவையும் அவர்கள் கேட்டதால் வந்ததல்ல. உலகின் ஒவ்வொரு அங்குலத்தையும் படம் பிடித்து, மேப்பாக்கி ஈசியாக பயன்படுத்தும் சாஃப்ட்வேர் வடிவில் தாருங்கள் என்று கூகுளிடம் நீங்கள் கேட்டீர்களா? டார்ச்லைட், காமிரா, அலாரம் எல்லாவற்றையும் செல்ஃபோனில் சேர்த்துத் தாருங்கள் என்று நாம்தான் கேட்டோமா?

பழகிய, குறுகிய வட்டத்திற்குள்ளேயே சிந்தித்தால் புதிய பொருள்களை புகுத்த முடியாது. புதுமையாய் சிந்திக்க அந்த வட்டத்திற்கு வெளியே சிந்திக்க வேண்டும். இதைத்தான் அவுட் ஒஃப் தி பாக்ஸ் திங்கிங் என்பார்கள். ஆனால் நம் அறிவும் அனுபவமும் நம்மை மீண்டும் அந்த பெட்டிக்குள்ளேயே கட்டிப் போட்டு விடுகின்றன.

வாடிக்கையாளரிடம் சென்று அவரிடம் என்ன வேண்டும் என்று கேட்காமல் அவரை அவர் புரிந்து கொண்டதை விட நீங்கள் புரிந்து கொள்ள முயலுங்கள். அவர் தேவையை அவர் அறிவதற்கு முன்னேரே நீங்கள் புரிந்துகொண்டு அதற்கான தீர்வை அளியுங்கள். அப்பொழுதுதான் புதிய பொருள் வகைகளும், சிறந்த முறையில் மக்கள் தேவையை பூர்த்தி செய்யும் விதங்களும் புலப்பட்டும்.

அதற்காக வாடிக்கையாளரிடம் பேசாதீர்கள் என்று கூறவில்லை. அவரிடம் விடையை கேட்காதீர்கள் என்கிறேன். அவர்களை கேள்வி கேளுங்கள். ஆராயுங்கள். முடிந்தால் அவரோடு சில நாள் வாழ்ந்து கூட பாருங்கள். தப்பில்லை. அவர் தேவையை அவரை விட நீங்கள் தெளிவாக உணருங்கள். அந்த தேவையை பூர்த்தி செய்யும் வழிகளை தேடி அதை அவருக்கு அளியுங்கள். நீங்கள் செய்யவேண்டிய வேலையை வாடிக்கையாளரை செய்யச் சொல்லாதீர்கள் என்று கூறுகிறோம்!

சந்தைப்படுத்தல் வரலாறு நமக்கு உணர்த்துவது இதையே. ஒவ்வொரு வாடிக்கையாளர்களின் தேவையை புரிந்து கொள்வது உங்கள் வேலை. அதற்கு தீர்வு வழங்குவதே உங்கள் வெற்றி!

அமெரிக்காவில் குதிரை வண்டிகள் மட்டுமே இருந்த காலத்தில் 'ஹென்றி ஃபோர்டு' காரை அறிமுகப்படுத்தி வெற்றி பெற்றார். வாடிக்கையாளர்களிடம் அவர்கள் தேவை என்ன என்று கேட்டு காரை அறிமுகப்படுத்தினீர்களா என்று அவரிடம் கேட்டார்கள். குதிரை வண்டி மட்டும் தெரிந்த அவர்களிடம் வேறென்ன வேண்டும் என்று நான் கேட்டிருந்தால் இன்னும் வேகமாக ஓடும் குதிரை வேண் டும் என்றுதான் அவர்கள் கேட்டிருப்பார்கள்' என்றார் ஃபோர்டு!




ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,169.57 | 6,137.70 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,508.4 | 3,483.67 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,401.242 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** ஈகுவிட்டி ரூ பிஎல்சி(55.00), வட்டவல (23.60), ஆர்பிகோ(195.00), களனி வேலி(65.00), டில்மா சிலோன்(675.00).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** எஸ்எம்பி லீசிங்(0.50), சிங்கபுத்திர பினா(8.50), அமானா தகபுல்(0.70), ரன்கிறின்(54.60), ஆதாம் இன்வெஸ்மனட(0.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)



| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 148.43 | 152.16 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 186.20 | 192.54 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 157.57 | 163.59 |
| சுவிஸ் பிராங் | 147.43 | 153.31 |
| கனேடிய டொலர் | 112.61 | 117.06 |
| அவுஸ்திரேலிய டொலர் | 110.82 | 115.77 |
| சிங்கப்பூர் டொலர் | 103.69 | 107.50 |
| ஜப்பான் யென் | 1.28 | 1.33 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.20 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 40.90 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி








யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கு பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. மூன்று அமர்வுகளாக நடைபெற்ற இந்த பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வில். யாழ்.பல்கலைக்கழகத்தின் 32 ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் பட்டதாரிகளாக அறிவிக்கப்பட்ட 450 வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கு பட்டச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதில் வணிகமாணி, வியாபார முகாமைத்துவமாணி, கலைமாணி ஆகிய பட்டச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பட்டச்சான்றிதழ்களை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் வழங்கி கௌரவித்தார். (படங்கள்: பொ.சோபிகா)

# அரசுடன் விளையாடவேண்டாம் அமைச்சர் மனோ எச்சரிக்கை



அரசாங்கத்துடன் விளையாட வேண்டாம் என தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தெரனியகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லிணக்கம் மற்றும் அனைத்து இனங்களின் ஒற்றுமைக்காகவும் குரல் கொடுக்கும் சகல தரப்பினரும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முடியும்.

இவ்வாறான தரப்பினருடன் இணைந்து அரசாங்கம் முன்நோக்கி பயணம் செய்யும்.

அரசாங்கத்துடன் எதேச்சாதிகாரமாக செயற்பட எவரும் முயற்சிக்கக்கூடாது. அதற்கு அனுமதியளிக்கப்படாது.

அரசாங்கத்தை கவிழ்க்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிக்காது என மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-3)

**காணி விற்பனைக்கு உண்டு**

தென்மராட்சிகச்சாய்கிளாலி றோட்டில் உள்ள 3 1/2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு (வன்னியர் கோவிலுக்கு அருகாமையில்)
தொடர்புகளுக்கு:
T.P.No -077 422 8705 (7648)

**மனதில் சுமையா?**

வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?
*உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.*
**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
(தினமும் காலை 9.00 - 1.00)
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யா/ஸ்கந்தவரோதயா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறும்.அதிபர் எம்.செல்வஸ்தன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பட்டய பொறியியலாளர் என்.நந்தரூபன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) திருமதி கோசலை குண பாலசிங்கம், கௌரவ விருந்தினராக எம்.பிரிதிவிராஜா தம்பதிகள் (லண்டன்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந் நிகழ்வில் திருமதி சகிதா நந்தரூபன் பரிசில்களை வழங்குவார்.(இ-3)

**40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற "றோயல் குளுக்கோஸ்"**

PACKED BY: ROYAL INDUSTRIES, Colombo-13 TP:- 077 727 7670




தற்போது புதிய வடிவில்!!

இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள் "றோயல் குளுக்கோஸ்"
தொடர்புகளுக்கு
சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP:-021 222 2567

**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 27 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:A/சொந்த தொழில்<br>தொ.இ: B/6827 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/6842 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 14<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6829 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 35 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்துபெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6846 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: BSc/ஜேமன் PR<br>தொ.இ: B/6830 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 53 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தாதி<br>தொ.இ: G/6852 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 4 8செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:A/L/கடை<br>தொ.இ: B/6831 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 58செவ் 7 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:NDT/ பொறியியலாளர்<br>தொ.இ: G/6858 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# அம்பாறை மாவட்டத்தை மொழி அடிப்படையில் இரு நிர்வாக மாவட்டங்களாக பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை. ஒரு பார்வை


புதிய அரசியல் யாப்பில் கல்முனைக் கரையோர மாவட்டம் ஒன்றுஉருவாக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை குறிப்பாக அம்பாறை பிரதேச முஸ்லிம் தலைவர்களால் முன்வைக்கப்பட்டு அரசுக்கு கடும் அழுத்தம் கொடுப்பதைக் காணலாம். கடந்த சில தசாப்தங்களாக முஸ்லிம் தலைவர்களால் இக்கோரிக்கை முன்னெடுக்கப்பட்ட பொழுதும் கடிணப்போக்கு சிங்களத் தலைவர்களின் எதிர்ப்பால் இது கைகூடவில்லை. இக்கரையோர மாவட்டக் கோரிக்கைக்கான காரணங்கள் யாவை. இக்கரையோரப் பகுதியில் வாழும் முஸ்லிம், தமிழ் மக்களின் நிலைப்பாடுகள் மற்றும் இக்கோரிக்கை இன்றைய அரசியல் சூழ்நிலையில் கைகூடுமா போன்ற விடயங்கள் இங்கு ஆய்வுக்கு உட்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் 63% மேற்பட்ட மக்கள் தமிழ் பேசுபவர்களாக இருக்கின்றபொழுதும் மற்றும் மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலகப் பிரிவுகளில் 13 பிரதேச செயலகப் பிரிவுகள் தமிழ்பேசும் மக்களை மிகப் பெரும்பான்மையினராகக் கொண்டிருக்கின்ற பொழுதும்கூட இம்மாவட்ட நிர்வாகத்தில் தமிழ் மொழிக்குரிய இடம் கொடுக்கப்படவில்லை. இலங்கைக் குடியரசு யாப்பில் தமிழ்மொழிக்கு நிர்வாக மொழி, தேசிய மொழி அந்தஸ்துகள் கொடுக்கப்பட்டு இருக்கின்ற பொழுதும் மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தில் தமிழ்மொழிக்கு சிறப்பு இடம் கொடுக்கப்பட்டு இருப்பினும் அதனை மாவட்ட நிர்வாகம் கருத்திற்கொள்ளவில்லை. இவ் அலட்சியப் போக்கால் தமிழ்பேசும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன் சுய கௌரவத்தையும் இழக்க வேண்டியுள்ளது. மொழிப்பிரச்சினைக்கு அப்பால் தமிழ் பேசும் பகுதிகள் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படுவதாகவும் இம்மக்களின் சமூக-சமய-பண்பாட்டு மேம்பாடுகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படுவதில்லை என்ற கவலை இவர்களை வாட்டுகின்றது.

அம்பாறைமாவட்டதமிழ்பேசும் மக்கள் இன்று எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்படவேண்டுமாயின் இம்மாவட்டத்தை மொழி ரீதியில் இரண்டு மாவட்டங்களாக பிரிக்கவேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது. ஒன்று தமிழ்பேசும்மக்களைஉள்ளடக்கிய பிரதேசசெயலர்பிரிவுகளைஇணைத்த கரையோர மாவட்டம். மற்றையது இன்றைய அம்பாறை மாவட்டத்தில் சிங்களம் பேசும் செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய மாவட்டம். முன்னையதற்கு கல்முனை நகரமும் பின்னையதற்கு அம்பாறை நகரமும் நிர்வாக மையங்களாக இருக்கலாம். ஏற்கனவே அம்பாறை நகரம்நிர்வாகமையமாக இருக்கின்றது.

அம்பாறை மாவட்டம் கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களில் நிலப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இம்மாவட்டம் 4146 சதுர கிலோமீற்றர் பரப்புடைய விசாலமான பிரதேசத்தையும் 60 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட கரையோரத்தையும் கொண்டுள்ளது. கல்லோயா, மகாவலி திட்டங்கள் மூலம் நீர்ப்பாசன வசதி கொண்ட மிகப்பரந்த நெற்செய்கை பிரதேசத்தை கொண்டுள்ளது. இலங்கையின் நெல்லுற்பத்தியிலும் மீன்பிடியிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இம்மாவட்டம் இன்று 700,000 இற்கு மேற்பட்ட குடிசனத் தொகையைக் கொண்டிருப்பதுடன் மூவின மக்களையும் முஸ்லிம்கள் (43.4%), சிங்களவர் (38.9%), தமிழர் (17.4%) கொண்டதாக இருக்கின்றது.

தற்போதைய மாவட்டம் 1961 ஆம் ஆண்டுக்கு முன்பு மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1961 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி வடக்கு- கிழக்கு மாகாணங்களில் முன்னெடுத்த சத்தியாக்கிரகப் போராட்டத்தால் இவ்விரு மாகாணங்களில் அரச நிர்வாகம் ஸ்தம்பிதமடைந்தது. மிகப்பெரிய கல்லோயா அபிவிருத்தித் திட்ட வேலைகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உட்பட்டிருந்தது. சத்தியாக்கிரகப் போராட்டத்தால் கல்லோயா திட்ட வேலைகள் பாதிக்கப்பட, இதற்கு அவசர தீர்வாக புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டதுடன் இதன் நிர்வாக மையம் சிங்களப் பகுதியில் அமைந்த அம்பாறை நகரில் வேண்டும் என்று அமைக்கப்பட்டது. பிரிபடாத மட்டக் களப்பு மாவட்டம் மிகவும் விசாலமாக இருந்தாலும் இம்மாவட்டம்




ஒருகாலம் பிரிக்கப்படவேண்டி வந்திருக்கும். எனினும் புதிய மாவட்டத்தின் எல்லை நிர்ணயம் தற்போது இருப்பதை போல் இருக்காமல், வேறு மாதிரியே அமைந்திருக்கும். சிங்களப் பிரதேசங்களே புதிய மாவட்டமாக வந்திருக்கும். தமிழ்பேசும் பிரதேசங்கள் யாவும் வாகரையில் இருந்து பாணமை வரை மட்டக்களப்பு மாவட்டத்துடன் தொடர்ந்து இருந்திருக்கும். அம்பாறை மாவட்ட உருவாக்கமும் இதன் நிர்வாக மையம் அம்பாறை நகரில் அமைக்கப்பட்டதும் முஸ்லிம், தமிழ் தரப்புகளின் அரசியல் நிகழ்ச்சிகளுக்கு ஆப்பு வைக்கும் உள்நோக்கம் கொண்ட செயற்பாடாகவே அமைந்தது.

அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் 1963, 1971, 1981, 2001, 2012 ஆம் ஆண்டுகளில் குடிசனக் கணிப்புகள் இடம்பெற்றன. 1921, 1946 ஆம் ஆண்டுகளின் குடிசனக் கணிப்புகளில் இருந்து இம்மாவட்ட பரப்புக்குரிய குடிசனத் தரவுகளைப் பெறக்கூடியதாகவுள்ளன.

அட்டவணை I இல் அம்பாறை மாவட்டத்தின் குடிசனத் தொகை வளர்ச்சி 1921-2012 காலத்துக்கு காட்டப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தின் குடிசனத் தொகை இயற்கை அதிகரிப்பால் மாத்திரமல்லாமல் பாரிய குடியேற்றத் திட்டங்கள் மூலமே அதிகரித்துள்ளது. கல்லோயா திட்டத்தின் மூலமும் மகாவலி C ஒழுங்கு அபிவிருத்தி திட்டத்தின்மூலம் பெருமளவு சிங்கள மக்கள் இங்கு குடியேற்றப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் இன விகிதாசாரம் அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ளது.

1953 இற்குப் பிறகு முஸ்லிம்கள், சிங்களவர்களுடைய இன விகிதாசாரம் சிறு ஏற்ற இறக்கத்துடன் காணப்படினும் தமிழர்களின் விகிதாசாரம் 1953 இல் இருந்து தொடர்ச்சியாக குறைந்து வருவதைக் காணலாம். தமிழர்களின் பிறப்பு விகிதம் குறைவாகவும் இறப்பு விகிதம் அதிகமாகவும் குடிவெளி யேற்றம் கூடுதலாக இருந்ததுமே இவ்வீழ்ச்சிக்கு காரணங்களாக இருக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில் இன, மொழிப்பரம்பலை நோக்கும் பொழுது சிங்களம் பேசும் பிரதேசமாகவும் தமிழ்பேசும் பிரதேசமாகவும் தெளிவாக பிரிக்கக்கூடியதாக இருப்பதுடன் ஒவ்வொன்றும் தொடர்ச்சியான பிரதேசங்களை முறையே கொண்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பேசும் பிரதேசமும் அட்டவணை III அடங்கும். பிரதேச செயலகப் பிரிவு களும் குடிசனத் தொகையும் இனவிகிதாசாரங்களும் 2012

தமிழ் பேசும் வலயத்தின் குடிசனத் தொகை 2012 இல் 400346 பேராக இருந்தது. இத்தொகை இம்மாவட்டத்தின் மக்கள் தொகையில் 62.26 விகிதமாகும். கரையோர தமிழ்பேசும் வலயத்தில் சிங்களவரல்லாத மக்கள் தொகையின் விகிதம் 99.21 விகிதமாகும். இவ்வலயத்தில் 2012 இல் 3140 சிங்கள கரையோர தமிழ்பேசும் பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பு 960 சதுர கிலோமீற்றராகும். இது மாவட்த்தின் நிலப்பரப்பில் 23.75 விகிதமாக இருப்பதுடன் தொடர் நிலப்பரப்பாகவும் இருக்கின்றது. இப்பிரதேசத்தின் சராசரி குடிசன வடர்த்தி 2012 இல் 417 பேராக இருந்தது. இப்பகுதி 960 சதுர மைல் நிலப்பரப்பைக் கொண்டும் 400,000 இற்கு மேற்பட்ட தமிழ் பேசும் மக்களைக் கொண்டிருப்பதால் ஒரு மாவட்டமாக வருவதற்கான தகுதிகளைப் பெற்றுள்ளதெனலாம். (தொடரும்)



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

அட்டவணை I

| குடிசனக் கணிப்பு ஆண்டு | எண்ணிக்கை ஆயிரத்தில் | குடிசன அதிகரிப்பு ஆயிரத்தில் | குடிசன அதிகரிப்பு வீதத்தில் |
|---|---|---|---|
| 1921 | 64.4 | -- | -- |
| 1946 | 95.0 | 30.6 | 47.5 |
| 1953 | 135.0 | 40.3 | 42.4 |
| 1963 | 211.7 | 76.4 | 56.5 |
| 1971 | 272.7 | 60.9 | 28.8 |
| 1981 | 388.9 | 116.3 | 42.7 |
| 2001 | 589.3 | 200.4 | 51.5 |
| 2012 | 649.4 | 60.0 | 10.2 |

அட்டவணை II

| ஆண்டு | குடிசனத்தொகை | முஸ்லிம் (%) | தமிழர் (%) | சிங்களவர்(%) | ஏனையோர்(%) |
|---|---|---|---|---|---|
| 1953 | 135,000 | 60.0 | 32.2 | 7.5 | 0.3 |
| 1963 | 211,820 | 46.6 | 23.8 | 29.3 | 0.3 |
| 1971 | 272,780 | 45.9 | 23.4 | 30.4 | 0.3 |
| 1981 | 388,786 | 41.6 | 20.4 | 37.8 | 0.3 |
| 2001 | 589,344 | 41.6 | 18.8 | 39.3 | 0.3 |
| 2012 | 649,402 | 43.4 | 17.4 | 38.9 | 0.3 |

அட்டவணை III

| செயலகப் பிரிவு | பரப்பு (ச.கி.மீ) | குடித்தொகை | முஸ்லிம்(%) | தமிழர்(%) | சிங்களவர்(%) | ஏனையோர்(%) |
|---|---|---|---|---|---|---|
| அட்டாளைச்சேனை | 62 | 41,968 | 92.32 | 1.81 | 5.84 | 0.2 |
| அக்கரைப்பற்று | 60 | 39,166 | 99.37 | 0.15 | 0.45 | 0.03 |
| ஆலையடிவேம்பு | 90 | 22,458 | 0.11 | 97.87 | 1.06 | 0.96 |
| கல்முனை (முஸ்லிம்) | 22 | 44,632 | 97.37 | 0.26 | 0.37 | 0.04 |
| கல்முனை (தமிழ்) | | 29,800 | 7.99 | 89.55 | 0.81 | 1.65 |
| சாய்ந்தமருது | 06 | 25,461 | 99.74 | .16 | .09 | .03 |
| காரைதீவு | 07 | 16,839 | 40.15 | 58.97 | 0.16 | .72 |
| நிந்தவூர் | 35 | 26,361 | 96.10 | 3.81 | 0.07 | .02 |
| திருக்கோயில் | 184 | 25,277 | -- | 99.42 | .57 | .01 |
| பொத்துவில் | 265 | 34,809 | 78.16 | 19.00 | 2.62 | .23 |
| சம்மாந்துறை | | 60,465 | 86.54 | 12.42 | 0.65 | .38 |
| நாவிதன்வெளி | 229 | 18,727 | 34.12 | 64.87 | 0.95 | .06 |
| இறக்காமம் | | 14,383 | 90.92 | 2.49 | 6.58 | - |
| | 960 | 400,346 | 70.75 | 28.21 | .79 | 0.25 |

# சித்திரவதைக் குற்றச்சாட்டு; ஐ.நாவின் அறிக்கையை நிராகரித்து பதில் அறிக்கை தயாராகிறது இலங். அரசு

(கொழும்பு)

***இலங்கையில் தொடர்ந்தும் சித்திரவதைக் கலாசாரம் நீடிப்பதாக ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் ஜுவான் மென்டஸ் சமர்ப்பித்துள்ள அறிக்கையை நிராகரித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் பதில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளது.***

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சித்திரவதைகள் மற்றும் ஏனைய கொடூரமான, மனிதமாபிமானமற்ற அல்லது இழிவுபடுத்தும் நடவடிக்கைகள், தண்டனைகள் தொடர்பான ஐ.நா.சிறப்பு அறிக்கையாளரான, ஜுவான் மென்டஸ், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் மார்ச் மாத அமர்வில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது. இலங்கையின் பல்வேறு பாதுகாப்பு முகவர் அமைப்புகளாலும் சித்திரவதை கலாசாரம் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது. இந்த அறிக்கைக்கு எதிர்வரும் ஜெனிவா அமர்வில் பதில் அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த அறிக்கையை நிராகரித்துள்ள பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர், எந்தவிதமான சான்றுகளும் இல்லாமல் தனி நபர்களின் வாக்குமூலங்களின் அடிப்படையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதனை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும். எனினும், இந்த அறிக்கையின் எந்தவொரு பரிந்துரைகளுக்கும் இணங்க முடியாது என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

இந்த அறிக்கையில் பொலிஸாரின் சித்திரவதைகளையே பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பொலிஸாரினால் எவரேனும் சித்திரவதை செய்யப்பட்டிருந்தால், அந்த நபர் நீதவான் முன்னிலையில் நிறுத்தப்படும் போது அதுபற்றி முறையிட முடியும். ஆனால் எவரேனும் அவ்வாறு செய்யவில்லை என்றும் அமைச்சு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி 27ஆம் திகதி ஆரம்பமாகி, மார்ச் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது அமர்வில் ஐ.நா.சிறப்பு அறிக்கையாளரின் இந்த அறிக்கை குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.' (இ-3)

# இலங்கை விரும்பும் போது எட்காவில் கையெழுத்திடலாம்-இந்தியத் தூதுவர்



இந்தியாவுடன் எட்கா உள்ளிட்ட எந்த உடன்பாட்டிலும், தாம் விரும்பும் போது இலங்கை கையெழுத்திடலாம் என்றும், இந்த விடயத்தில் இந்தியா அழுத்தங்களைக் கொடுக்காது என்றும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரண்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 68 ஆவது குடியரசுத் தினத்தை முன்னிட்டு, கடந்த வியாழக்கிழமை இரவு இந்தியா இல்லத்தில் நடந்த வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"முன்மொழியப்பட்டுள்ள எட்கா உடன்பாடு அல்லது வேறு எதனையும், இலங்கை மீது திணிக்கும் எண்ணம் இந்தியாவுக்குக் கிடையாது.

இலங்கை தனக்கு தேவைப்படும் போது, வசதியான வேகத்தில் இதனை இறுதிப் படுத்திக் கொள்ள முடியும். நாம் அதற்கு இணங்கத் தயார்.

எமது தொழில்நுட்ப முன்னேற்றங்களை உங்களின் அபிவிருத்தியின் முன்னேற்றங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கையின் 60 வீத ஏற்றுமதி, இந்திய- இலங்கை சுதந்திர வர்த்தக உடன்பாட்டின் கீழான, சலுகைகளைப் பெறுகின்றது. இலங்கையில் சக்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் துறையில் பல இந்திய முதலீடுகள் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

2.6 பில்லியன் டொலரை இலங்கைக்கு இந்தியா உதவியாக வழங்கியுள்ளது. இதில், 435 மில்லியன் டொலர் கொடையாக வழங்கப்பட்டுள்ளது" என்றும் அவர தெரிவித்துள்ளார். (இ-3)

# ஆறு உணவுப் பொருட்களுக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம்

ஆறு உணவுப்பொருட்களுக்கு அரசாங்கத்தினால் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளது.

இதனடிப்படையில் டுபாயில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் நெத்தலி 405 ரூபாவாகவும், தாய்லாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் நெத்தலி 490 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு கிலோகிராம் மைசூர் பருப்பின் அதிகபட்ச சில்லறை விலை 159 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் பயறு 205 ரூபா என்ற அதிகபட்ச சில்லறை விலைக்கு விற்பனை செய்யப்பட வேண்டும் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 93 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் உருளை கிழங்கு ஒரு கிலோகிராம் 115 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த அறிவித்தலினை தொடர்ந்து, எந்தவொரு உற்பத்தியாளரும், இறக்குமதியாளரும், விநியோகஸ்தரும் மற்றும் வர்த்தகரும் குறித்த பொருட்களை அதிகபட்ச சில்லறை விலைக்கு அதிகமாக விற்பனை செய்தலோ, விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாது என வர்த்தமானி அறிவித்தலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-3)

# காணாமற்போனோர் பணியகச் சட்டத்திற்கு முட்டுக்கட்டைபோடும் பாதுகாப்பு அமைச்சு



(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காணாமற்போனோர் பணியகம் தொடர்பான சட்டத்தின் சில அம்சங்கள் குறித்து கரிசனை வெளியிட்டு, பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

காணாமற்போனோர் பிரச்சினைகளைக் கையாளுவதற்காக, காணாமற்போனோர் பணியகத்தை உருவாக்குவதற்கான சட்டம் ஒன்று கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அந்தச் சட்டத்தில் திருத்தங்களை முன்வைக்கவிருப்பதாக ஜே.வி.பி. கூறியதையடுத்து, அரசாங்கம் அந்த சட்டத்தை நடைமுறைப் படுத்தாமல் இழுத்தடித்து வருகிறது.

இந்த நிலையில், காணாமற்போனோர் பணியகம் விரைவில் உருவாக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர யாழ்ப்பாணத்தில் கூறியிருந்தார்.

ஜே.வி.பி. உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் திருத்தங்களை முன்வைத்த பின்னர் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், பாதுகாப்பு அமைச்சு இந்த சட்டம் தொடர்பாக கரிசனை வெளியிட்டு, ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

இதனை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றிடம் உறுதிப் படுத்தியுள்ளார்.

காணாமற்போனோர் பணியக சட்டத்துக்கு பாதுகாப்பு அமைச்சு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுவதாக கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை அவர் நிராகரித்துள்ளார்.

எனினும், இராணுவ நிலைகளுக்குள் நுழைந்து தேடுதல் நடத்த அனுமதித்தல் உள்ளிட்ட, இந்தச் சட்டத்தின் சில பிரிவுகள் தொடர்பாக, கரிசனை வெளியிட்டு, ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அமைச்சினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# கால் நடைகளின் நலன் பேணும் குழுவை அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

கால்நடைகளின் நலன் பேணும் குழுவொன்றை அமைக்க, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா கவனம் செலுத்தியுள்ளார். இது தொடர்பில், அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார். அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளரர்.

இக்கூட்டம் தெருநாய்கள் குறித்த வேலைத்திட்டம் ஒன்றினை திட்டமிடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மாகாண சபை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உள்ளடங்கலாக குறித்த குழுவை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பொது மக்கள் மற்றும் கால்நடைகளின் நலன் பேணும் அமைப்புக்களின் கருத்துக்களைப் பெற்று, குறித்த குழுவுக்கான பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர், நாடு பூராகவும் பாடசாலை, வைத்திய சாலை, பஸ் தரிப்பிடங்கள் மற்றும் பொது இடங்களுக்கு அருகாமையில் நடமாடும் தெரு நாய்களினால் பொது மக்கள் அன்றாடம் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும், தினமும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த முறைப்பாடுகளுக்கு விரைவில் தீர்வொன்றினைப் பெற்றுக்கொடுக்கவே இந்தக் குழு அமைக்கப்படுகின்றது என்றும் ,நாய்களை தெருக்களில் கொண்டு வந்து விடுகின்றவர்களுக்கு சீ சீ டி வி கமெராக்களின் உதவியோடு கடும் சட்ட நடவடிக்கைகளை எடுக்க பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கவுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார். மேலும் கால் நடைகளின் நலன் பேணும் குழுவுக்கான ஆலோசனைகளை வழங்குமாறும், கால் நடைகளின் நலன் பேணும் அமைப்புக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். (இ-3)

# .43 தலைமை பொலிஸ் பரிசோதகர்களுக்கு பதவி உயர்வு

தலைமைப் பொலிஸ் பரிசோதகர்களாக செயற்பட்டு வரும் 43 பேரை உதவி பொலிஸ அத்தியட்சகர்களாக பதவி உயரத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த 43 பேருக்கான பதவி உயர்வு கடந்த டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமையவும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒப்புதல் அடிப்படையிலும் குறித்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (இ-3)

# வடக்கு, கிழக்கை அரசு இணைக்காது

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)


**நல்லாட்சி அரசாங்கம் வடக்கு- கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்காது என வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**


திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பௌத்த மதத்திற்கான முன்னுரிமைக்கு குந்தகம் ஏற்படாது.

கடந்த அரசாங்கமே நாட்டுக்கு பாதகம் ஏற்படக் கூடிய சமஷ்டி ஆட்சி முறையிலான அரசியல் சாசனமொன்றை உருவாக்க முயற்சித்தது எனவும் சஜித் தெரிவித்தார். (இ-3)

# ஊழல் மோசடியில் சிக்கி உயிரைக் காப்பாற்ற தப்பியோடி வந்தவர் தான் கருணா-பொன்சேகா





(கொழும்பு)

புலிகள் இயக்கத்தில் இருந்த போது ஊழல் மோசடியில் சிக்கி உயிரைக் காப்பாற்ற தப்பியோடி வந்தவர் தான் கருணா என்று பீல்ட் மார்ஷல் அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மல்வத்து அஸ்கிரி மகாநாயக்கரை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் பொன்சேகா இதனைத் தெரிவித்தார்.

“கருணா அம்மான் என்பவர் புலிகள் இயக்கத்தில் தொடர்ந்து இயங்க முடியாமல் தப்பியோடியவர். விடுதலைப் புலிகளிடம் ஊழல் மோசடிகளில் சிக்கி, பிரபாகர்னிடம் இருந்து உயிரை காப்பாற்றுவதற்காக தப்பி வந்தவர். பிரபாகரனுடன் ஒன்றாக வாழ்ந்த நபர் என்றாலும், அவரால் பிரபாகரனின் வீடு இருந்த இடத்தையேனும் கூறமுடியவில்லை. எங்கள் இராணுவத்தினர் தான் புதுக்குடியிருப்பில் வீட்டை கண்டுபிடித்தார்கள்.

அவரை வீரனாக்கியது மகிந்த ராஜ பக்ஷ தான்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# ஊழலை உடன் நிறுத்தாவிட்டால் மாற்று அரசை உருவாக்க நேரிடும்

## எச்சரிக்கிறது ஜே.வி.பி



(கொழும்பு)

ஊழல் மோசடிகளை உடன் நிறுத்தாவிட்டால், ஊழல் வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதியை சரியான முறையில் நிலை நாட்டக்கூடிய மாற்று அரசை உருவாக்குவோம் என ஜே.வி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் எச்சரித்துள்ளார்.

இந்த அரசு திருடர்களைப் பிடிக்கவில்லை. திருடர்கள் தான் இந்த அரசைப் பிடித்துள்ளனர். ஊழலுக்கு எதிராக பிரசாரம் செய்து ஊழல்வாதிகளைத் தண்டிக்கப் போவதாகக் கூறி வாக்குறுதியளித்து ஆட்சிப்பீடமேறிய இந்த அரசு வாக்குறுதியை மீறி நடப்பது மாத்திரமன்றி ஊழலில் ஈடுபடவும் செய்கின்றது. இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் செய்த முதல் திருட்டு தான் மத்திய வங்கி பிணைமுறி மோசடி. அதனைத் தொடர்ந்து ஊழல்கள் வெற்றிகரமாகத் தொடர்கின்றன. மகிந்த ஆட்சியில் ஊழல் புரிந்தவர்களைத் தண்டிப்பதை விட்டு விட்டு தானும் ஊழலில் ஈடுபட்டு வருகின்றது.

அத்துடன், ஆட்சிக்கு வந்து 2 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால், உருப்படியாக ஒரு திருடனையும் பிடிக்கவில்லை. அது தொடர்பான அக்கறை இந்த அரசுக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதில் அரசியல் டீல் இருக்கின்றது. இது தான் உண்மை. அப்படியென்றால், இது தொடர்பில் நீதியை நிலை நாட்டக்கூடிய திருடர்களுக்கு பாரபட்சமின்றி தண்டனைவழங்கக்கூடிய, ஊழலை முற்றாக நிறுத்தக்கூடிய மாற்று அரசு ஒன்றை உருவாக்குவிப்பதற்கு தான் இதற்கான ஒரே வழியாகும். இதை நாம் இனிச் செய்வோம்.

மேலும், மக்களுக்கு இது தொடர்பில் பொறுப்பு உண்டு. மாற்று அரசை உருவாக்குவிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இதைத் தவிர எமக்கு வேறு வழி இல்லை. தவறினால் நாடு மிஞ்சாது என ஜே.வி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித மேலும் தெரிவித்தார். (இ-3)

## இன்று ஒரு தகவல்

### வேண்டாதவர்கள் படைக்கு ஆள் சேர்ப்பதா?

அவன் என் வீட்டுக்கு வர்றதே இல்லை. நான் ஏன் போகணும்?

அவள் என்னைப் பார்த்துச் சரிவரப் பேசலை. நான் ஏன் போய்ப் பேசணும்?

அவன் என் கல்யாணத்தில் அரை மணி நேரம் தான் இருந்தான். நான் ஏன் நாள் பூரா இருக்கணும்?

அவன் என் பிறந்த நாளுக்கு ஆயிரம் ரூபாய் தான் கொடுத்தான்.நான் ஏன் இரண்டாயிரம் ரூபாய் கொடு கணும்? என்று பலரும் கணக்குப் பார்த்துப் பழகுவதைக் கவனித்திருக்கிறேன்.

இவர்கள் ஏன் இப்படி ஆமையும் நத்தையும் உடலை ஓட்டுக்குள் இழுத்துக் கொள்வதைப் போல மனதால் சுருங்கிச் சுருங்கிப் பேசுகிறார்கள் எனத் தெரியவில்லை.

எதிலும் நம் கைதான் ஓங்கி இருக்க வேண்டும் என்று எண்ண வேண்டும். இந்த எண்ணம் தான் நமக்குள் பெருந்தன்மையை வளர்க்கும்; நட்பையும் உறவையும் மலர்ந்து பெருகச் செய்யும்.

சிலருக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகள் மேற்கண்ட குற்றச்சாட்டுக்களை நாம் கூறும்படி அமைந்துவிடலாம்.

எவருக்குமே ஒன்றிற்கு மேற்பட்ட வாய்ப்புகள் தரப்பட வேண்டும். அப்படித் தரப்பட்டும் அவர்கள் அது ஒதுங்கிப் போனால் அது அவசியம் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

ஒருவர் நம் வீட்டிற்குச் சரிவர வருவதில்லை; நம்மிடம் நன்கு பேசுவதில்லை என்றால் அதற்கு இரு காரணங்கள் தாம் இருக்க முடியும்.

முதலாவது அவர்கள் வருத்தப்படும்படி நம்மையும் அறியாமல் நாம் நடந்து கொண்டிருப்போம். இரண்டாவது நாம் ஒரு தொல்லை தரும் ஆசாமி என்று அவர்கள் முடிவுக்கு வந்திருக்கலாம். இந்த எண்ணத்தை மாற்றாமல் எப்படி அவர்களைச் சரி செய்ய முடியும்? நம்மிடமிருந்து விலகிப் போறவர்களை சரியென்று பழையபடி ஆக்குவது இருக்கிறதே. அது தான் உண்மையான வெற்றி.

மற்றவர்களைவிடப் பெருந்தன்மையுடன் நடந்து அவர்களை வெற்றி கொள்ள வேண்டுமே தவிர, அவர்கள் நடந்து கொண்டதை விட ஒரு படி கீழே நடந்து நமக்கு வேண்டாதவர்களின் படைக்கு நாமே ஆள் சேர்க்கக்கூடாது. மற்றவர்கள் ஒரு வட்டம் போட்டால் நாம் அதற்கு வெளி வட்டம் போட வேண்டும் தவிர, உள் வட்டம் போடலாகாது. இப்படிப் போட்டுக் கொண்டே போனால் – நம்மிடம் ஒரு புள்ளி கூட மிஞ்சாது!

**லேனா தமிழ்வாணன்**

# யாழ்.பல்கலை.சித்த மருத்துவத்துறை ஒரு தனி நிறுவகமாக வளர்ச்சி பெறும்

## மூத்த பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் நம்பிக்கை

**''யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை நடத்திய தேசிய சுதேச மாநாடும் கண்காட்சியும் எதிர்காலத்தில் சித்த மருத்துவத்துறை ஒரு தனி நிறுவகமாக வளர்ச்சி பெறுவதற்குரிய கால்கோளாக அமைந்துள்ளது என மூத்த பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் தெரிவித்துள்ளார். கைதடியில் கடந்த 27ஆம் திகதி தொடங்கிய தேசிய சுதேச மகாநாட்டில் 'சித்த வைத்தியமும் நாமும்' என்ற தொனிப்பொருளில் உரை நிகழ்த்திய பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் மேலும் தெரிவிக்கையில்,''**



முதலாவதாக, இந்த மகாநாட்டிலே கலந்து கொண்டு கருத்துரை வழங்குவதையிட்டு நான் பேருவகையடைகின்றேன். காரணம், சித்த மருத்துவத்துறை யாழ் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகி மூன்று தசாப்தங்களுக்கு மேலாகிய நிலையில் இத்தேசிய மகாநாடு முதன் முதலாக இத்துறையினால் முன்னெடுக்கப்படுவதும் இதனையொட்டி நடைபெற்ற கண்காட்சியும் எதிர்காலத்தில் சித்த மருத்துவத்துறை ஒரு தனி நிறுவகமாக வளர்ச்சி பெறுவதற்குரிய கால்கோளாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

அதுவும், இம் மகாநாட்டின் கருப்பொருளாக 'இயற்கையோடிணைந்த ஆரோக்கியமான வாழ்வை நோக்கி' என்னும் தலைப்புக் காணப்படுவது மிகவும் பொருத்தமானது. ஈழநாட்டினைப் பொறுத்தவரையிலே இயற்கை வளத்துக்குக் குறைவில்லை. நீர் நிலைகள் என்றால் என்ன, மரஞ்செடி கொடிகள் என்றால் என்ன, தாதுப்பொருட்கள் என்றால் என்ன இயற்கை அன்னை அளித்த அழியாக் கொடையாக இவை காணப்படுகின்றன. மிகச் சுலபமாகவும் மலிவாகவும் பெரும் பொருட் செலவின்றி இவற்றைப் பெறுவதற்கான சூழல் காணப்படுகின்றது. மனிதனால் இயற்கையின் இயல்பு நிலை அழிக்கப்பட்டு வந்தாலும் கூட இன்றைய சூழலில் பெருமளவு இயற்கை வளம் தப்பிப் பிழைத்துள்ளது என்பது ஒரு சந்தோசமான செய்தியாகும். இவற்றின் பயன்பாடு என்ன, இவற்றை எத்தகைய தேவைகளுக்கு ஆக்கபூர்மாகப் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டறியும் தகுதியும், திறமையும் சித்த மருத்துவத்துறையிலே பாண்டித்தியம் பெற்றவர்களுக்குத் தான் முடியும். அவர்களால் இனங்காணப்பட்ட இயற்கை தந்த செல்வங்களை - நோய் நொடிகளுக்கு மருந்தாகப் பயன்படும் இவற்றை மக்கள் அறிந்து பயன்பெறுவதற்கு இன்றைய கண்காட்சி ஒரு திறவுகோலாக அமைகிறது. மரஞ்செடி கொடிகளை வீட்டுத் தோட்டமாகவும் மூலிகைத் தோட்டங்களாகவும் அமைத்து இவற்றின் பயனைத் தாம் அறிந்து ஏனையோருக்கும் பயன்படும் வண்ணம் மக்களுக்கு அறிவுறுத்துவதாக இக் கண்காட்சி அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

சுதேச மருத்துவத் துறைகளாக சித்த, ஆயுர்வேதம், யுனானி வைத்தியங்கள் காணப்பட்டாலும் தமிழ் மொழியோடு இணைந்து நமது தேசிய இனத்தின் கலாசாரத்தின் அடையாளமாக விளங்குவது தான் சித்த வைத்தியம். தமிழ் மொழி இன்று உலகில் வாழும் மொழிகளில் செம்மொழியாக விளங்குவது மட்டும்ல்லாமல் சித்த வைத்தியம் என்ற முதுசத்தையும் நமக்கு அளித்த பெருமையும் அதற்குண்டு. இதற்குக் காரணம் சித்த வைத்தியம் பற்றிய மூல நூல்கள் அனைத்தும் தமிழ்மொழியில் தான் காணப்படுகின்றன. இத்துறை கொழும்பில் ஏனைய சுதேச வைத்தியத் துறைகளோடு இணைந்து செயற்பட்டாலும் 1984 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினை நோக்கி இடமாற்றம் பெற்றதன் பின்னரே தனித்துவம் பெறத் தொடங்கிற்று. இதற்கு அன்றைய காலத்தின் தேவையும் கட்டாயமும் முக்கிய அம்சங்களாகக் காணப்பட்டன.

பிரபல கல்விமானும் கொடை வள்ளலுமாகிய சேர் பொன். இராமநாதனால் 1921 ஆம் ஆண்டில் சைவப்பிள்ளைகள் சைவச் சூழலிலும் பாரம்பரியத்திலும் கல்வி கற்பதற்காக 25 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரிதான் 1974 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகமாக மாறிப் பின்னர் தனித்துவமான பல்கலைக்கழகமாக உருமாறியது. தென்னிலங்கையில் பௌத்த கலாசார மையங்களான வித்தியோதய, வித்தியாலங்காரப் பிரிவேனாக்கள் எவ்வாறு நாளடையில் தனித்துவம் வாய்ந்த. அதேநேரத்தில் தமது கலாசார பாரம்பரியத்தின் அடையாளத்தை பேணும் பல்கலைக்கழகங்களாக முதிர்ச்சி பெற்றனவோ அவ்வாறே சைவத் தமிழ்க் கலாசாரத்தின் அடிநாதமாக விளங்கிய பரமேஸ்வராக் கல்லூரியும் பல்கலைக்கழக நிலையில் தமிழ் கலாசாரத்தின் விழுமியங்களை பேணும் நிறுவனமாக வளர்ச்சி பெற வேண்டும் என்பதை இவ்வளாகத்தின் உருவாக்கத்திற்கு உழைத்த அன்றைய கல்வியமைச்சராக விளங்கிய டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மக்முத்தீனின் வளாகத்தை தொடக்கி வைத்து ஆற்றிய உரை கோடிட்டுக் காட்டுகின்றது. அதாவது,

"இவ் வளாகம் பல்கலைக்கழகத்துக்குப் பொதுவான உரிய துறைகள் பலவற்றிற்கும் இடமளிக்கும். எனினும், இப் பிரதேசத்திற்கே தனித்துவமாக உள்ள தமிழ்மொழி, தமிழ் இசை, தமிழ்க்கலாசாரம் ஆகியவற்றை வளர்ப்பதற்கும் அவை பற்றிய ஆழமான ஆராய்வுகளை மேற்கொள்வதற்கும் தனியிடமளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.'

அன்னாரின் மேற்கூறிய தீர்க்க தரிசனம் மிக்க உரைக்கு அணிசேர்ப்பதாக மருதனார்மடத்தில் அமைந்துள்ள தமிழ் இசையும் நாட்டியமும் சிறப்பாகப் போதிக்கப்பட்டு வந்த சேர் .பொன் இராமநாதன் நுண்கலைக்கழகம் இப்போது அவருடைய நாமத்தைத் தாங்கிய ஆய்வு நிறுவகமாக வளர்ச்சி பெற இருக்கின்றது.

இத்தகைய நிலையே தமிழ்க் கலாசாரத்தின் அடையாளங்களில் ஒன்றாகிய சித்த மருத்துவத் துறையும் தனிநிறுவகமாக வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பை அளிககவுள்ளது. 1984 ஆம் ஆண்டு சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகத்துக்கு மாற்றம் பெற்ற நிகழ்வுதான் இன்று அது ஒரு தனி நிறுவகமாக மாற்றம் பெறுவதற்கு கால்கோளாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது.

வருங்காலத்தில் தமிழ் தேசிய இனத்தின் அடையாளங்களான இசை, நடனம், சித்த வைத்தியம் ஆகியன சைவப் பெருவள்ளலின் சிந்தனையில் உருவான பரமேஸ்வராக் கல்லூரிப் பாரம்பரியத்தில் இடம் பிடித்துள்ளமை பழம் நழுவிப் பாலில் விழுந்தமைக்கு ஒப்பானதாகும்.

ஏற்கனவே கூறிய வண்ணம் சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவமாகும். இது கலப்படமில்லாத தூய கலாசாரப் பாரம்பரியத்தினை உடையது. தமிழர் செம்மொழியாக - இன்று சர்வதேச மொழியாகக் கொடிகட்டி நிற்கும் தமிழை மட்டும் உலகிற்கு அளித்துச் செல்லவில்லை. மாறாக, இதன் தனித்துவத்தைப் பறைசாற்றி நிற்கும் சித்த வைத்தியத்தையும் எமது முதுசமாக கையளித்துள்ளனர். சித்த மருத்துவம் சித்த வைத்தியத்தோடு மட்டும் நின்று விடவில்லை. அது மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் உடல்தத்துவம், சமயம், சோதிடம், பஞ்சபட்சி, சரம், மருந்து, மருத்துவம், பரிகாரம் போன்றவற்றையும் உள்ளடக்கி வளர்ந்துள்ளது. சித்த வைத்தியர்கள் இவற்றினை ஐயந்திரிபற கற்க வேண்டும் என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்தி நிற்கின்றது.

சோதிடம் பஞ்சபட்சிதுலங்கிய
சரநூல் மார்க்கம்
கோதறு வகார வித்தை
குருமுனி ஓது பாடல்
தீதிலாக் கக்கிடங்கள்
செப்பிய கன்ம காண்டம்
ஈதெலாம் கற்றுணர்ந் தோர்
இவர்களே வைத்தியராவர்.....

இன்றைய மகாநாட்டில் கருப்பொருளாக 'இயற்கையோடிணைந்த ஆரோக்கிய வாழ்வை நோக்கி' என்ற தலைப்பு அமைவதையும் இதன் ஆய்வுப் புல உப தலைப்புகளாக சூழலும் மருத்துவத் தாவரங்களின் பரம்பலும், சுதேச மருத்துவத்தின் ஆய்வுகளும் சுதேச மருத்துவமும், யோகாசனம் விளையாட்டு விஞ்ஞானமும், உயிரியல் விஞ்ஞானம், சுதேச மருத்துவ ஏட்டுச் சுவடிகள், மருத்துவமும் சுகாதாரமும், விவசாயமும் உணவு விஞ்ஞானமும், ஆன்மீகம், சமூக விஞ்ஞானம், சித்த மருந்தியல் என்பன அமைவதையும் நோக்கும் போது நீங்கள் சித்த மருத்துவத்தைச் சரியாகப் புரிந்துகொண்டுள்ளீர்கள் என்பது புலனாகிறது. வெறும் புரிந்துணர்வோடு நின்றுவிடாது, பாடவிதானத்தில் இவற்றை இணைப்பதில் மட்டும் திருப்திப்பட்டுவிடாது அன்றாட வாழ்க்கை, மகாநாட்டின் கருப்பொருளாக விளங்கும் 'இயற்கையுடன் இணைந்த ஆரோக்கிய வாழ்க்கையை நோக்கிய' பயணமாக நிறைவுபெற வேண்டும்.

எவ்வாறு தமிழ் கலாசாரத்தின் தனித்துவத்தை உலகளாவிய ரீதியில் பறைசாற்றி நிற்கும் அடையாளமாகச் 'சிவநடனம்' காணப்படுகின்றதோ அத்தகைய பெருமை சித்த மருத்துவத்திற்கும் உண்டு. சிவநடனம் என்பது சாதாரணமான நடனம் அன்று. இதனை இறைவனுடைய திருவிளையாடல்களில் ஒன்றாக மட்டும் மட்டுப்படுத்தி விடமுடியாது. சைவசித்தாந்தம், பக்தி இலக்கியம், கலை, தத்துவம், போன்றவையெல்லாம் ஒருங்கிணைந்த தமிழ் கலாசாரத்தின் தனித்துவத்தை விளக்கும் குறியீடாக இது விளங்குகின்றது. இவ்வாறே தான் சித்த வைத்தியமும் தமிழ் கலாசாரத்தின் அதன் பாரம்பரியத்தின் பல்வேறு கூறுகளின் திரட்சியாகவும், அடையாளமாகவும் சிறப்பெய்தி நிற்கின்றது.

**சித்த வைத்தியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

ஐதீகங்கள் சித்த வைத்தியத்தின் தோற்றத்தினைச் சிவபெருமானுடன் இணைக்கின்றன. சித்த வைத்தியம் பற்றிய அறிவை சிவனிடமிருந்து உமாதேவியார் பெற்று பின்னர் அகத்திய முனிவருக்கு அளிக்க, சித்தர்கள் எனும் முக்காலத்தினையும் உணர்ந்த பண்டைய ரிஷிகள் அகத்தியரிடமிருந்து இதனை உள்வாங்கி குருகுலக் கல்வி மூலம் பரப்பினர் என்றும் கூறப்படுகின்றது. வரலாற்றுப் பின்புலத்தில் இதன் உருவாக்கத்தை இந்திய நாகரிகத்துக்கு அடித்தளமிட்ட சிந்துவெளி நாகரித்துடன் இணைப்பாரும் உளர். எவ்வாறாயினும் தமிழ் கலாசாரத்துக்குரிய பழைய சங்க இலக்கியங்களில் சித்த வைத்தியத்திற்கு அடிப்படையான பொருள்கள் பற்றிய குறிப்புகள் காணப்பட்டாலும், சித்த வைத்தியம் பற்றிய தனியான நூல்கள் இற்றைவரை கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் சித்த வைத்திய மரபின் பிதாமகராகக் கருதப்படும் கி.பி 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலருடைய திருமந்திரம் சித்த வைத்தியத்தின் மூலநூலாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்...)

# சேவல் ஆண்டை ஆடிப்பாடி வரவேற்ற சீன மக்கள்







(பீஜிங்)

சீனாவில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் வெகு கோலாகலமாக நடைபெற்று வருகின்றன. சேவல் ஆண்டாக பிறந்துள்ள இந்த புத்தாண்டை கோடிக்கணக்கான மக்கள் ஆடிப்பாடி மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

சீனாவில் 12 இராசிகளின் அடிப்படையில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை எலி, குரங்கு, ஆடு, குதிரை என புத்தாண்டு அடையாளப் படுத்தப்படுகிறது.

அவ்வகையில், நேற்றுப் பிறந்த 2017 ஆம் புத்தாண்டை சீன மக்கள் சேவல் ஆண்டாக கொண்டாடி வருகின்றனர்.


அறுவடை காலம் முடிந்து இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாகவும் சீன மக்கள் புத்தாண்டை கொண்டாடுவதால் ஒருவாரத்துக்கு பொது விடுமுறை அளிக்கப்படுவது இங்கு வழக்கமாகவுள்ளது.

இந்த விடுமுறையை பயன்படுத்தி, உற்றார், உறவினர்கள், நண்பர்களை சந்திக்க வெளியூர்களுக்கு சென்றும், பிரசித்தி பெற்ற சுற்றுலா தளங்களை பார்வையிட்டும் சீன மக்கள் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவது வழக்கம்.

அவ்வகையில் நேற்று பிறந்த சேவல் ஆண்டையொட்டி, ஆடல், பாடல் என மகிழ்ச்சியுடனும் மக்கள் புத்தாண்டு வாழ்த்துகளை பரிமாறி வருகின்றனர்.

தலைநகர் பீஜிங் உள்ளிட்ட நாட்டின் முக்கிய பகுதிகளில் உள்ள கடை வீதிகள் மின் அலங்காரத்தில் ஜொலிக்கின்றன. (இ-7)

# ட்ரம்பின் உத்தரவு அகதிகளுக்கான கதவை அடைக்கும் மலாலா வேதனை



சிரிய அகதிகள் அமெரிக்கா வர ட்ரம்ப் தடை விதித்திருப்பது, தன்னை மனமுடைய செய்துள்ளதாக பாகிஸ்தான் சமூக ஆர்வலரும், நோபல் பரிசு பெற்றவருமான மலாலா யூசப் வேதனை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அகதிகளுக்கான குடியுரிமைக் கொள்கையில் பல்வேறு அதிரடி மாற்றங்களைப் புகுத்திய ஜனாதிபதி ட்ரம்ப் அதற்கான செயலாக்க உத்தரவை கடந்த வெள்ளிக்கிழமையன்று பிறப்பித்தார்.

ட்ரம்ப் பிறப்பித்துள்ள புதிய உத்தரவின்படி, சிரிய அகதிகளுக்கு விசா வழங்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படுகிறது.

ட்ரம்ப்பிடம் இருந்து மறு உத்தரவு வரும்வரை சிரியர்களுக்கு அமெரிக்க விசா கிடையாது.

தற்போது, பரிசீலனையில் இருக்கும் விசா படிவங்கள்கூட கருத்தில் கொள்ளப் படாது.

மேலும், பார்டர் ரெஃப்யூஜி புரோகிராம் எனப்படும் எல்லையில் காத்திருக்கும் அகதிகள் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறுவதற்கான திட்டத்தை 4 மாதங்களுக்கு நிறுத்தி வைத்துள்ளார்.

இது முஸ்லிம்களை அமெரிக்காவுக்குள் வரவிடாமல் ட்ரம்ப் நிகழ்த்தும் கெடுபிடி என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ட்ரம்பின் இந்த முடிவு குறித்து மலாலா கூறும் போது,

"போரினால் பாதிக்கப்பட்ட சிரிய குழந்தைகளுக்கான கதவை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அடைத்திருப்பது என்னை மனமுடைய செய்துள்ளது.

சுமார் ஆறு வருடங்களாக அந்த குழந்தைகள் சிரியாவில் நடக்கும் போரினால் பாதிக்கப்பட்டவர்கள்.

உலகம் முழுவதும் பாதுகாப்பில்லாத சூழ்நிலை நிலவுகிறது.

குடிபெயர்ந்த மக்கள்தான் உங்கள் நாடு உருவாக பாடுபட்டார்கள்.

தங்களது கடின உழைப்பின் மூலம் தங்களுக்குக்கான புதிய வாழ்க்கையை அமைந்து கொண்டார்கள்.

அமெரிக்கா அகதிகளையும், புலம்பெயர்ந்தவர்களையும் அரவணைக்கும் நாடு என்ற வரலாற்று சிறப்புமிக்க இடத்திலிருந்து பின் னோக்கி சென்று விட்டது" என்று வேதனை வெளியிட்டுள்ளார். (இ-7)

# எல்லைச் சுவர் அமைப்புத் தொடர்பில் பொதுவெளியில் இனி பேசுவதில்லை

## அமெரிக்கா, மெக்ஸிக்கோ ஜனாதிபதிகள் முடிவு

**(வோஷிங்டன்)**

**அமெரிக்கா- மெக்ஸிக்கோ நாடுகளுக்கு இடையில் 2 ஆயிரம் மைல் நீளத்துக்கு எல்லைச்சுவர் கட்டுவது குறித்து மெக்ஸிக்கோ ஜனாதிபதியும் அமெரிக்க ஜனாதிபதியும் இனி பொது வெளியில் பேசுவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர்.**



மெக்ஸிக்கோ நாட்டில் இருந்து ஆண்டுதோறும் ஏராளமானோர் சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறுவதாக கூறப்படுகிறது. இதைத் தடுப்பதற்காக ஏற்கனவே அங்கு 670 மைல் தொலைவுக்கு பல பகுதிகளிலும் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இரு நாட்டு எல்லைப் பகுதியில் 2 ஆயிரம் மைல் நீளத்துக்கு மிகப்பெரிய தடுப்புச்சுவர் கட்டப்படும் என அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின்போது டொனால்ட் ட்ரம்ப் வாக்குறுதி அளித்திருந்தார்.

அதன்படி, தேர்தலில் வெற்றி பெற்று, ஜனாதிபதி பதவியை ஏற்றுள்ள நிலையில், மெக்ஸிக்கோ எல்லையில் தடுப்புச்சுவர் கட்டுவதற்கான நிர்வாக உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

அதுமட்டுமன்றி, இந்த தடுப்புச்சுவர் கட்டுவதற்கான பணத்தை மெக்ஸிக்கோ தர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆனால், அதை மெக்ஸிக்கோ நிராகரித்து விட்டது. இது தொடர்பாக மெக்சிகோ ஜனாதிபதி என்ரிக் பெனா நீட்டோ கருத்து தெரிவிக்கையில்,

"சுவர்களில் மெக்ஸிக்கோவுக்கு நம்பிக்கை இல்லை. நான் இதைப்பல முறை கூறிவிட்டேன். இந்த சுவருக்காக மெக்ஸிக்கோ எந்தப் பணமும் தராது" எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில், மெக்ஸிக்கோ எல்லையில் தடுப்புச் சுவர் கட்டுவது தொடர்பாக இரு நாட்டு தலைவர்களும் பொது வெளியில் இனி கருத்து தெரிவிக்க மாட்டார்கள் என்று மெக்ஸிக்கோ அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பேச்சுவார்த்தையின் மூலம் வேறுபாடுகளை களையவும் இருநாட்டு தலைவர்கள் முடிவு எடுத்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

மேலும், அந்த அறிக்கையில் ட்ரம்பும், பெனோ நீட்டோவும் ஒரு மணி நேரத்திற்கு மேலாக தொலைபேசியில் உரையாடியதாகவும் ஆக்கபூர்வமாகவும் பயனுள்ள வகையில் இந்த பேச்சுவார்த்தை அமைந்ததாகவும் மெக்ஸிக்கோ அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)




# ட்ரம்ப் அடுத்த அறிவிப்பு

## அகதிகளில் கிறிஸ்தவர்களுக்கே அமெரிக்கா முன்னுரிமையளிக்கும்

அமெரிக்காவில் அடைக்கலம் கேட்டு விண்ணப்பிக்கும் சிரியா நாட்டு அகதிகளில் கிறிஸ்தவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

கிறிஸ்தவ தொலைக்காட்சி நிறுவனத்துக்கு பேட்டி அளித்த டொனால்ட் ட்ரம்ப், 'சிரியாவில் இருந்துவரும் நீங்கள் கிறிஸ்தவர்களாக இருந்தால் தாராளமாக அமெரிக்கா வுக்குள் வரலாம்.

முஸ்லிம்களாக இருந்தால் வரவே முடியாது .

எல்லோருடைய தலைகளையும் வெட்டுவதுபோல் கிறிஸ்தவர்களும் சிரியாவில் வெட்டிக் கொல்லப்படுகிறார்கள்.

எல்லோருக்கும் எல்லா நியாயங்களும் வாய்ப்புகளும் அளிக்கப்பட வேண்டும்' என்றும் தெரிவித்தார்.

கடந்த 2016 ஆம் ஆண்டில் மட்டும் சிரியாவில் இருந்து வந்த அகதிகளில் முஸ்லிம்களின் எண்ணிக்கையை 38,901 ஆகவும், கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 37,521 ஆகவும் அமெரிக்க குடியுரிமைத் துறை பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# சிறுவர் அரங்கம்

## முட்டாளுக்கு புத்தி சொல்வது வீண்

ஒரு காட்டில் பல குரங்குகள் கூட்டமாக வசித்து வந்தன. குளிர்காலத்தில் ஒரு நாள் மிகவும் கடுமையான குளிராக இருந்தது. குரங்குகளால் குளிரைத் தாங்க முடியவில்லை.

கொஞ்சம் நெருப்பு கிடைத்தால் சருகுகளைப் போட்டுத் தீமூட்டி குளிர் காயலாம் என்று ஒரு கிழக்குரங்கு கூறிற்று. நெருப்புக்கு எங்கே போவது என்று குரங்குகள் யோசித்துக் கொண்டிருந்த போது ஒரு மின்மினிப் பூச்சி பளிச் பளிச் சென்று மின்னியவாறு பறந்து சென்று கொண்டிருந்தது. அதைக் கண்ட ஒரு குரங்கு அதோ நெருப்பு போகிறது என்று கூறிற்று. மற்றொரு குரங்கு அந்த மின்மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தரையில் போட்டது.

மற்ற குரங்குகள் சுற்றிலும் கிடந்த குப்பை கூளங்களைச் சேகரித்து வந்து மின்மினிப் பூச்சிமீது போட்டன. பிறகு குரங்குகள் நெருப்பு கொழுந்து விட்டு எரியப் போகிறது என எதிர்பார்த்து சூழ்ந்து அமர்ந்து கொண்டன. ஆனால் தீ எரியும் வழியைக் காணோம்.

பிறகு குரங்குகள் வாயினால் குப்பையை ஊதி நெருப்பை எரிய விடும் முயற்சியில் ஈடுபட்டன. மரத்தில் அமர்ந்து குரங்குகளின் கோமாளிக் கூட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு பறவை கலகலவென்று சிரித்தபடி மரத்தை விட்டிறங்கி கீழே வந்து அமர்ந்தது.



பிறகு குரங்குகளை நோக்கி நண்பர்களே மின்மினிப் பூச்சியை நெருப்பு என்று எண்ணிக் கொண்டு தீ மூட்ட வீண் பிரயாசை எடுக்கிறீர்கள்.

நீங்கள் என்னதான் வாயால் ஊதினாலும் மின்மினிப் பூச்சியிடமிருந்து நெருப்பு வரவே வராது. வீண் வேலையை விட்டுவிடுங்கள் என்று புத்திமதி கூறிற்று.

உனக்கு ஒன்றும் தெரியாது. வாயை மூடிக்கொண்டு உன் வேலையைப் பார் என்று கூறிவிட்டு குரங்குகள் மறுபடியும் குப்பையை வாயால் ஊதித் தீ உண்டாக்க முயற்சியெடுத்தன.

பறவை, குரங்குகளின் முட்டாள் தனத்தை எண்ணிப் பரிதாபப்பட்டு திரும்பத் திரும்ப குரங்குகளுக்கு புத்திமதி கூறிக் கொண்டிருந்தது. இதனால் கோபமுற்ற குரங்குகள் பறவை மீது பாய்ந்து அதனைப் பிடித்து தரையில் மோதிக் கொன்று விட்டன.

## 01.2017 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1648 - எண்பதாண்டுப் போர்: நெதர்லாந்துக்கும் ஸ்பெயினுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் உடன்பாடாகியது.
- 1649 - முதலாம் சார்ல்ஸ் மன்னன் தூக்கிலிடப்பட்டான். அவனது மனைவி ஹென்றியேட்டா மரீயா பிரான்ஸ் சென்றாள்.
- 1649 - பொதுநலவாய இங்கிலாந்து என்ற குடியரசு அமைக்கப்பட்டது.
- 1649 - இளவரசர் சார்ல்ஸ் ஸ்டுவேர்ட் இரண்டாம் சார்ல்ஸ் தன்னை இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் மன்னனாக அறிவித்தான். எனினும் எவரும் அவனை அங்கீகரிக்கவில்லை.
- 1820 - எட்வர்ட் பிரான்ஸ்ஃபீல்ட் அண்டார்டிக்காவில் தரையிறங்கினார்.
- 1835 - ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆண்ட்ரூ ஜாக்சன் கொலை முயற்சியில் இருந்து தப்பித்தார்.
- 1889 - ஆஸ்திரியாவின் இளவரசர் ருடோல்ஃப் தனது காதலியுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.
- 1930 - உலகின் முதலாவது சயனைழளழனெந சோவியத் ஒன்றியத்தில் உருவாக்கப்பட்டது.
- 1933 - அடொல்ஃப் ஹிட்லர் ஜெர்மனியின் அதிபராக (Chancellor) பதவியேற்றார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: உக்ரேனில் லேத்திச்சிவ் என்ற இடத்தில் யூதர்கள் ஆயிரக்கணக்கில் நாசிகளால் கொல்லப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பால்ட்டிக் கடலில் வில்ஹெல்ம் கூஸ்ட்லொஃப் என்ற பயணிகள் கப்பல் சோவியத் நீர்மூழ்கிக் கப்பலினால் தாக்கப்பட்டதில் அதில் பயணம் செய்த 9,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1948 - மகாத்மா காந்தியை நாதுராம் கோட்சே என்ற இந்து மத அடிப்படைவாதி சுட்டுக் கொன்றார்.
- 1964 - ரேஞ்சர் 6 விண்கலம் ஏவப்பட்டது.
- 1964 - தென் வியட்நாமில் ஜெனரல் நியுவென் கான் (Nguyen Khanh) இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- 1972 - வட அயர்லாந்தில் விடுதலைப் போராட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்ட 14 பேர் ஐக்கிய இராச்சிய துணை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1972 - பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகியது.
- 1976 - தமிழ்நாட்டில் மு. கருணாநிதியின் திமுக ஆட்சி கவிழ்க்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.
- 1994 - பியோத்தர் லேக்கோ சதுரங்க ஆட்டத்தில் உலகின் முதலாவது வயதில் குறைந்த கிராண்ட் மாஸ்டர் ஆனார்.
- 2000 - கென்யாவின் விமானம் ஒன்று அட்லாண்டிக் கடலில் ஐவரி கோஸ்ட் கரையில் வீழ்ந்ததில் 169 பேர் கொல்லப்பட்டனர்.
- 2003 - பெல்ஜியம் சமப்பால் திருமணத்தைச் சட்டபூர்வமாக்கியது.
- 2006 - தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் ஒரு பெண் உட்பட 7 இலங்கைத் தமிழர் மட்டக்களப்பு, வெலிக்கந்தையில் கடத்தப்பட்டனர். இவர்கள் இறந்து விட்டதாகப் பின்னர் அறிவிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1882 - பிராங்கிளின் ரூஸ்வெல்ட், 32வது ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர். (இ. 1945)
- 1899 - மாக்ஸ் தெய்லர், நோபல் பரிசு பெற்றவர். (இ. 1972)
- 1910 - சி. சுப்பிரமணியம், இந்திய அரசியல்வாதி. (இ. 2000)
- 1941 - டிக் சேனி, அமெரிக்காவின் 46வது துணைத் தலைவர்.
- 1949 - பீட்டர் ஆகர், நோபல் பரிசு பெற்றவர்.
- 1974 - கிறிஸ்டியன் பேல். பிரித்தானிய திரைப்பட நடிகர்.

### இறப்புகள்

- 1832 - ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன், கடைசிக் கண்டி அரசன்.
- 1891 - சார்ல்ஸ் பிராட்லா, ஆங்கில அரசியல் கிளர்ச்சியாளர். (பி. 1833)
- 1928 - ஜொஹான்னஸ் ஃபிபிகர், நோபல் பரிசு பெற்றவர் . (பி. 1867)
- 1948 - மகாத்மா காந்தி. (பி. 1869)
- 1948 - ஓர்வில் ரைட், ஐக்கிய அமெரிக்காவின் வானூர்தி நிபுணர் . (பி. 1871)
- 1969 - Georges Pire, நோபல் பரிசு பெற்றவர். (பி.1910)
- 1981 - வில்லியம் கொபல்லாவ, இலங்கையின் முதலாவது சனாதிபதி. (பி. 1897)
- 1991 - ஜோன் பார்டீன், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1908)
- 2007 - சிட்னி ஷெல்டன், அமெரிக்க எழுத்தாளர். (பி. 1917)
- 1874 - இராமலிங்க அடிகளார். ஆன்மிகவாதி .(பி.1823)

### சிறப்பு நாள்

- இந்தியா - தியாகிகள் நாள்.
- உலக தொழுநோய் ஒழிப்பு நாள்.



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 70 | 120 | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 95 | 90 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 240 | 220 | 200 | 240 | 200 | 200 | 200 |
| தக்காளி | 100 | 100 | 120 | 70 | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 40 | 60 | 20 | 20 | 40 | 40 | 30 |
| கரட் | 60 | 60 | 60 | 60 | 70 | 120 | 50 |
| பூசணி | 50 | 60 | 35 | 50 | 40 | 60 | 60 |
| புடோல் | 70 | 60 | 50 | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 60 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 80 | .110 | 120 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 160 | 70 | 220 | 100 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 70 | 80 | 100 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 70 | 50 | 100 | 50 |
| பயற்றங்காய் | 140 | 100 | 200 | 200 | 160 | 160 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 60 | 60 | 80 | 100 | 60 |
| பீற்றூட் | 60 | 60 | 170 | 50 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 150 | 200 | 170 | 240 | 200 | 200 | 180 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 500 | 600 | 600 | 800 | 700 |
| போஞ்சி | 100 | 100 | 70 | 80 | 60 | 80 | 60 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 40 | 100 | – | 100 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 200 | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 55 | 50 | 50 | 60 | 65 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 250 | 100 | 200 | 200 | 160 | 160 | 180 |
| வெங்காயப்பூ | 60 | 50 | 60 | 60 | 80 | 100 | 100 |
| முள்ளங்கி | 50 | 50 | 60 | 60 | 50 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 30 | 40 | 20 | – |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 60 | 60 | 50 | 80 | 70 |

### சிறுமி கடத்தல் முயற்சி முறியடிப்பு

# பொலிஸ் வாகனத்திலிருந்த பெண் மீது கல் வீசித் தாக்குதல்

பொலிஸ் ஜீப்பிற்குள் இருந்த பெண் மீது கற்களால் வீசி காயப்படுத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கரணவாய்ப் பகுதியைச் சேர்ந்த பதின்ம வயதுச் சிறுமி ஒருவரை அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கடத்திச் சென்றதாக நெல்லியடிப் பொலிஸில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இரவு நேரம் அல்வாய்ப் பகுதியில் தேடுதல் மேற்கொள்வதற்காக கடத்தப்பட்ட சிறுமியின் தாயாரையும் அழைத்துக் கொண்டு நெல்லியடிப் பொலிஸார் அங்கு சென்றனர்.

ஆனால் அவர்கள் சிறுமியைக் கைவிட்டு விட்டு தப்பிச் சென்ற நிலையில் சிறுமியை மீட்டு ஜீப் வண்டியில் ஏற்றி வரும் போது அப் பகுதியில் நின்ற குழுவொன்று பொலிஸ் ஜீப் மீது கற்களால் வீசியதாகவும் இதனால் ஜீப் வண்டிக்குள் இருந்த சிறுமியின் தாயார் காயமடைந்த நிலையில் பருத் தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3-60)

# ஊர்காவற்றுறை விளையாட்டு மைதானம் உரிய முறையில் புனரமைக்கப்படவில்லை

### கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்



விளையாட்டு மைதானம் உரிய முறையில் புனரமைக்கப்படவில்லை எனத் தெரிவித்து ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் இணைந்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊர்காவற்றுறைப் பகுதியில் பொது விளையாட்டு மைதானம் புனரமைப்பதற்கு வட மாகாண விளையாட்டு அமைச்சால் கடந்த வருடம் 20 இலட்சம் ரூபா நிதி பிரதேச செயலகமூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் முதல் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் வேலைகள் முடிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் அவ் வேலைகள் நவம்பர் மாதம் முடிவடையாத காரணத்தினால் ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் ஒருமாத கால அவகாசம் கோரப்பட்டு டிசெம்பர் மாதம் வேலைகள் முடிவுற்றது. எனினும் விளையாட்டு மைதானம் விளையாடுவதற்கு உகந்ததாக இல்லை.

தரமற்ற கிரவல் கற்கள் தரமற்ற மண்ணைக் கொண்டு புனரமைக்கப்பட்டது. சகலவிளையாட்டுக்கழக கழகங்களூடாகவும் இது தொடர்பாக பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கணக்காய்வுக் குழு வருகை தந்து பார்வையிட்டு இக் கிரவல்கள் தரமற்றவை எனக் கூறியதாகவும் இதனால் ஊர்காவற்றுறையிலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் இணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (இ-3)

# இலங்கையில் வருடமொன்றுக்கு 2, 000 தொழுநோயாளர்கள்

இலங்கையில் வருடமொன்றுக்கு 2,000 புதிய தொழுநோயாளர்கள் வரை இனங்காணப்படுகின்றனரென, உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. நேற்று உலக தொழுநோய் தினமாகும். இத்தினம், ஜனவரி மாதம் 30ஆம் திகதியன்று அல்லது ஜனவரி மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் உலகத் தொழுநோயாளர் நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 22 முன்னுரிமை நாடுகளில் இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, மியன்மார், நேபாளம் என்பன அடங்குவதாகவும் தொழுநோயாளர்களில் 10 சதவீத மானோர் சிறுவர்களாக உள்ளனரெனவும் இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் தொடர்பாடல் உத்தியோகத்தர் கரென் றெய்டி தெரிவித்தார்.

"சர்வதேச ரீதியாக 212,000 தொழுநோயாளர்கள் உள்ளனர். இதில், 8.9 சத வீதமானோர் சிறுவர்கள். மொத்த நோயாளர்களில் 6.7 சதவீத மானோர் பார்வை குறைதல், சதை கரைதல் மற்றும் நகங்கள் நீளுதல் எனும் கடும் நோய்க்குறிகளைக் காட்டுபவர்களாக உள்ளனர்" என, உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் பூனம்சிங் தெரிவித்தார். "தொழு நோயாளர்களுக்கு எதிரான பாகுபாடுகளை அனுமதிக்கும் சட்டங்கள் இரத்துச் செய்யப்பட வேண்டும். பேருந்துகளிலும் புகையிரதங்களிலும் பயணிக்கும் உரிமையைத் தடை செய்தல், மருத்துவ அல்லது உரிமை அடிப்படையில், இவ்வாறான பாகுபாட்டை அனுமதிக்க முடியாது" எனவும், டாக்டர் பூனம்சிங் மேலும் தெரிவித்தார். (இ-3)

# தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் திடீர் இடமாற்றம்;மக்கள் விசனம்

திறம்படச் செயற்பட்ட நெல்லியடி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தருக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டமை தொடர்பில் அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.


வடமராட்சிப் பகுதியில் போலி நாணயத்தாள்களினை அச்சிட்டு புழக்கத்தில் விட்டு வந்த நபர்கள் அனைவரையும் கைது செய்வதற்கு முன்னின்று செயற்பட்டவரும் பருத்தித்துறையிலிருந்து கொழும்பிற்கு கடத்தப்பட விருந்த கஞ்சா பொதியினை மாலுசந்தியில் வைத்து மடக் கிப்பிடிப்பதற்கு முன்னின்று செயலாற்றிய கெஜகதீஸ்வரன் என்ற தமிழ் பொலிஸாருக்கே இவ் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் கரவெட்டிப் பகுதியில் பாடசாலைக்கு வந்த மாணவி ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் கடத்த முற்பட்டபோது அதனை தனிநபராக நின்று முறியடித்து மாணவியை மீட்டு பெற்றோரிடம் மேற்குறித்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு திறம்பட செயலாற்றிய தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தருக்கு திடீர் இட மாற்றம் வழங்கப்பட்டமை தொடர்பில் அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (இ-3,60)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 972

Search for people, places and things — Nagendram Home

**தர்சிகா**

இன்று முதல் தினமும் வல்லாரைக்கீரை உணவில் சேர்த்துக் கொள்ளவும்...!!



தேர்தல் வரும் வரை எதையும் மறந்திடவேக் கூடாது!!

**பிரசன்னா சாந்தன்**

கோபம் ஒரு சிறந்த உணர்வு. ஏனென்றால், மானம், ரோசத்தை பல நேரங்களில் வெளிப்படுத்துவது கோபம்தான்.

**ரதி**

சொந்தகாரங்க :படிச்சி முடிச்சப்புறம் என்ன செய்ய போறே?



பையன் : புக்கை மூடிடுவேன்..

**தினேசன்**

தொட்டதக்கெல்லாம் என் மனைவி கோவிச்சுக்கிறா... அப்படி நீ என்னத்த தொட்ட?



வீட்டு வேலைக்காரியைதான்.....

!!!!!!!!!....

**குகதர்சன்**

என்னடி உன் புருஷன் தினமும் இப்படி குடிச்சுட்டு வராரே நல்லாவா இருக்கு



தெரியலம்மா நான் இன்னும் டேஸ்ட் பண்ணி பார்க்கலை!!

**சிந்து**



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பிரதமர் மோடியை அவமதித்தவர்கள் தேசவிரோதிகளே

## நிர்மலா சீதாராமன் ஆவேசம்



தேசியக் கொடியையும், பிரதமரையும் அவமதிக்க யாருக்கும் உரிமை இல்லை. எனவே பிரதமரை அவமதித்தவர்கள் தேசவிரோதிகள் என்று மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

சென்னை கமலாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட நிர்மலா சீதாராமன் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்குறித்தவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஜல்லிக்கட்டு விவகாரத்தில் மத்திய அரசை விமர்சிக்க ஒன்றுமில்லை. மத்திய அரசுதான் உரிய கருத்துகளைத் தெரிவித்து ஜல்லிக்கட்டுக்கு அனுமதி பெற்றுள்ளது. ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டத்தின் போது ஏற்பட்ட சென்னைக் கலவரம் எதிர்பாராதது.

அந்தவகையில், ஜல்லிக்கட்டு விவகாரத்தில் துரோகம் இழைத்த காங்கிரஸ் கட்சி மன்னிப்புக் கேட்க வேண்டும். ஆரம்பத்திலிருந்தே ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்த ஒரே கட்சி பா.ஜ.க.தான்.

தேசியக் கொடியையும், பிரதமரையும் அவமதிக்க யாருக்கும் உரிமை இல்லை. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும் பிரதமர் பதவிக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்காமல் பிரதமரை அவமதித்தவர்கள் தேசவிரோதிகள்தான்.

அத்தோடு, எந்த மாநிலத்தையும் மத்திய அரசு புறக்கணிப்பதில்லை. அனைத்து மாநிலங்களையும் மத்திய அரசு அரவணைத்து செல்லவே நினைக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஒற்றுமையே இந்தியாவின் பலம்

## மாணவர் படை முன்பாக பிரதமர் மோடி உரை



(டில்லி)

ஒற்றுமை தான் இந்தியாவின் வலிமைக்கான அடித்தளமாக அமைந்துள்ளது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேசிய மாணவர் படையின் (என்.சி.சி) சார்பில் டெல்லியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற பேரணியில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல்வேறு பகுதிகள், நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள், சுமார் 1,500 வட்டாரப் பேச்சுவழக்குகள், பலதரப்பட்ட பழக்க, வழக்கங்கள், உணவு வகைகள் ஆகியவை இருந்த போதிலும் இந்தியர்கள் ஒற்றுமையுடன் விளங்குவது குறித்து உலகம் வியப்பில் ஆழ்ந்துள்ளது.

இதுதான், நமது நாட்டின் பலம். பேரரசர்கள், ஆட்சியாளர்கள், அரசுகள் மட்டுமே ஒரு நாட்டை அமைத்து விட முடியாது. நாடானது தனது குடிமக்கள், இளைஞர்கள், விவசாயிகள், விஞ்ஞானிகள், உழைப்பாளிகள், துறவிகள் உள்ளிட்டோரால் தான் அமையும்.

இந்தியாவின் வலிமையையும், பன்முகத்தன்மையையும் தேசிய மாணவர் படையில் அங்கம் வகிப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

வருங்கால இந்தியா குறித்த நம்பிக்கையை ஊக்குவிக்கும் வகையில் தேசிய மாணவர் படையினர் திகழ்கின்றனர்.

'தூய்மை இந்தியா' திட்டத்தை செயல்படுத்துவதில் அவர்கள் பெரும் பங்களிப்பை அளிக்கின்றனர்.

மேலும், அவர்கள் ரொக்கமற்ற பணப் பரிவர்த்தனையை ஊக்குவிப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும். இதுகுறித்து அவர்கள் தங்களைச் சுற்றியுள்ளவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

ரூபாய் தாள்களை அச்சிடுவதற்குத் தேவையான தாள்கள், போக்குவரத்துச் செலவினங்கள், ஏ.ரி.எம் இயந்திரங்களின் பயன்பாடுகள் ஆகியவற்றைக் குறைப்பதன் மூலம் சேமிக்கப்படும் பணத்தை ஏழைகளின் மேம்பாட்டுக்காக பயன்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# ஜல்லிக்கட்டு சட்டத்தை எதிர்க்கமாட்டோம் விலங்குகள் நல வாரியம் திடீர் அறிவிப்பு

தமிழக சட்டசபையில் நிறைவேற்றிய ஜல்லிக்கட்டு சட்டத்தை எதிர்க்க மாட்டோம் என்று விலங்குகள் நல வாரியம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

உச்ச நீதிமன்றம் விதித்த தடையால், தமிழ்நாட்டில் கடந்த 2 ஆண்டுகளாக ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறவில்லை.

தமிழக அரசின் வற்புறுத்தலை தொடர்ந்து, ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி அளித்து கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி மத்திய அரசு அறிவிக்கை ஒன்றை வெளியிட்டது.

இந்த அறிவிக்கை இரத்து செய்யக்கோரி இந்திய விலங்குகள் பாதுகாப்பு சங்கங்களின் கூட்டமைப்பு உள்ளிட்ட 4 அமைப்புகள் மற்றும் 9 தனி நபர்கள் சார்பில் உச்ச நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணை முடிவடைந்தது. திகதி குறிப்பிடாமல் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்கக்கோரியும், விலங்குகள் நல அமைப்பான பீட்டாவை தடை செய்ய வலியுறுத்தியும் தமிழகத்தில் மாணவர்களும், இளைஞர்களும் பொது மக்களும் திரண்டு போராட்டங்களை நடத்தினர், ஜல்லிக்கட்டு நடத்தும் வகையில், மிருகவதை தடுப்பு சட்டத்தின் சில பிரிவுகளில் திருத்தங்கள் மேற்கொண்டு தமிழக அரசு கடந்த வாரம் அவசர சட்டம் பிறப்பித்தது.

அதைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமையன்று நடைபெற்ற சட்டசபையின் சிறப்பு கூட்டத்தில் ஜல்லிக்கட்டுக்காக நிரந்தர சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, ஜல்லிக்கட்டு தொடர்பான அனைத்து போராட்டங்களும் முடிவுக்கு வந்தன.

இதனால், ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி அளித்து கடந்த ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி பிறப்பித்த உத்தரவை மத்திய அரசு வாபஸ் பெற முடிவு செய்தது.

இதற்கிடையே, ஜல்லிக்கட்டு நடத்த வழிவகை செய்து தமிழக அரசு சட்ட சபையில் நிறைவேற்றிய சட்டமசோதாவை இரத்து செய்யக்கோரி, இந்திய விலங்குகள் நல வாரியம் மற்றும் பல்வேறு விலங்குகள் நல அமைப்புகளின் சார்பில் உச்ச நீதிமன்றம் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அங்கமான இந்திய விலங்குகள் நல வாரியம் சார்பில் அதன் உறுப்பினர் சட்டத்தரணி அஞ்சலி சர்மா, ஜல்லிக்கட்டு சட்டத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்த இடைக்கால மனு பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியது. மேலும் இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பிரமாண பத்திரத்தில் தவறான தகவல்கள் இருந்ததும் தெரியவந்தது.

இந்த நிலையில், ஜல்லிக்கட்டு நடத்தும் வகையில் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை எதிர்ப்பது இல்லை என்ற உறுதியான நிலைப்பாட்டை இந்திய விலங்குகள் நல வாரியம் எடுத்துள்ளது.

எனவே, இடைக்கால மனுவை வாபஸ் பெறுமாறு கோரி சட்டத்தரணி அஞ்சலி சர்மாவுக்கு இந்திய விலங்குகள் நல வாரிய செயலாளர் எம்.ரவிக்குமார் கடந்த 24 ஆம் திகதி கடிதம் ஒன்றை எழுதினார். ஆனால் இடைக்கால மனுவை வாபஸ் பெற முடியாது என்றும், மனுத் தாக்கல் செய்ய தனக்கு அதிகாரம் உள்ளதாகவும் அஞ்சலி சர்மா தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து, இந்திய விலங்குகள் நல வாரிய தலைவர் எஸ்.எஸ்.நேகி உறுப்பினர் அஞ்சலி சர்மாவுக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அந்த கடிதத்தில், ஜல்லிக்கட்டு வழக்கில் இடைக்கால மனுத் தாக்கல் செய்ய முன்பு தவறுதலாக அனுமதி அளிக்கப்பட்டதாகவும் அந்த அனுமதியை தற்போது வாபஸ்பெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஜல்லிக்கட்டு சட்டத்துக்கு எதிராக 'கியூபா', 'பீபோ', 'அனிமல் ஈக்வாலிட்டி' ஆகிய விலங்குகள் நல அமைப்புகளின் சார்பில் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, அமிதவ ராய் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இன்று திங்கட்கிழமை விசாரணைக்கு வருகின்றன.

இருப்பினும் இந்திய விலங்குகள் நல வாரிய உறுப்பினர் அஞ்சலி சர்மா தாக்கல் செய்த இடைக்கால மனு விசாரணை பட்டியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மெரினாவில் பொலிஸ் குவிப்பு பெப். 12 வரை 144 தடையுத்தரவு



ஜல்லிக்கட்டு ஆதரவு போராட்டம் போன்று பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மெரினா கடற்கரையில் மீண்டும் போராட்டம் நடத்தப் போவதாக சமூக வலைத்தளங்களில் தகவல் பரவியதையடுத்து அங்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பலத்த பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கான தடையை நிரந்தரமாக நீக்க வலியுறுத்தி கடந்த 17 ஆம் திகதி சென்னை மெரினா விவேகானந்தர் இல்லம் எதிரே மாணவர்கள், இளைஞர்கள், பொது மக்கள் திரண்டு போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில் 10 இலட்சம் பேர் வரை பங்கேற்றனர்.

தமிழக அரசு சார்பில் ஜல்லிக் கட்டுக்கு அவசரச் சட்டம் இயற்றப்பட்ட நிலையில், கடந்த 23 ஆம் திகதி போராட்டக்காரர்களை கலைந்து செல்லும்படி பொலிஸார் வலியுறுத்தினர்.

ஒரு சிலர் போராட்டத்தை கைவிட மறுத்ததால் அவர்களை பொலிஸார் வலுக்கட்டாயமாக வெளியேற்ற முயன்றனர்.

இதைத் தொடர்ந்து வன்முறை வெடித்தது. நடுக்குப்பம், ஐஸ் அவுஸ், திருவல்லிக்கேணி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பெற்றோல் குண்டு, போத்தல், கல்வீச்சு, தடியடி உள்ளிட்ட சம்பவங்கள் நடந்தன.

போராட்டக் களத்தில் சமூக விரோதிகள் ஊடுருவி கலவரம் செய்ததாக மாநகர காவல் ஆணையர் எஸ்.ஜார்ஜ் தெரிவித்தார்.

மோதலில் 142 பொலிஸார் காயம் அடைந்தனர். 117 வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கறுப்புப் பணத்தைக் கொண்டே மகிந்த அணியினர் ஆர்ப்பாட்டம்

## அமைச்சர் காரியவசம் குற்றச்சாட்டு

கடந்த ஆட்சியில் கொள்ளையடித்ததன் மூலம் கிடைத்த கறுப்புப் பணத்தைக் கொண்டே மகிந்த அணி ஆர்ப்பாட்டங்களை நடத்துவதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் குற்றம் சுமத்தியுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் தற்போது மாற்றத்திற்கான ஆரம்பம் என்ற தலைப்பில் போராட்டங்கள், பேரணிகளை நடத்துகின்றனர்.

கடந்த காலத்தில் கொள்ளையிடப்பட்ட அரச சொத்துக்களின் மூலம் சேர்க்கப்பட்ட கறுப்புப் பணத்தினூடாகத் தான் இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த கறுப்புப் பணத்தை கொண்டே ஆர்ப்பாட்டத்திற்காக ஆட்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கான உணவு உட்பட்ட பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இலங்கையில் 5,000 ரூபாய் நாணயத்தாள் இரத்து செய்யப்படும் பட்சத்தில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரின் இந்த போராட்டங்கள் முடிவிற்கு கொண்டுவரப்படும் என்று அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்தார்.(இ-3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 02 1931



உதிர்வு 11 02 2016

### அமரர் கந்தையா இலட்சுமி

திதி:- பூர்வபக்ஷ திருதியை

சிரார்த்த தினம்:- 30.01.2017

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ஆனந்தபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கந்தையா இலட்சுமி அவர்கள் மறைந்து ஒரு ஆண்டு கடந்தும் அன்னார் இன்னும் எங்களுடன் வாழ்வது போன்ற பிரமை. அன்னாரை நினைவு கூர்ந்து ஆன்ம ஈடேற்றத்திற்காக பிரார்த்திக்கும்

(7610)

க.சிவலிங்கம்
ஆனந்தபுரம் கிழக்கு,
கிளிநொச்சி. 077 534 6359

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்

## மரண அறிவித்தல்



### திருமதி குமாரசாமி பார்வதி

பிறப்பு: 01.10.1938 இறப்பு:28.01.2017

யாழ். நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பார்வதி அவர்கள் 28-01-2017 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சுப்பையா பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் குமாரசாமி அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, பேரம்பலம், நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாசுகி (ஜேர்மனி), காலஞ்சென்ற செந்தில்நாதன், வளர்மதி (இலங்கை), சிவதாசன் (டென்மார்க்), சிவசங்கர்(கனடா), கிரிதரன்(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசரட்ணம் (ஜேர்மனி), குகநேசன் (தொழில்நுட்பவியலாளர்-பிராந்திய விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம்- இரணைமடு), அனுசா(டென்மார்க்), மதிவதனா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரணவன், சாமந்தி (கொழும்பு), தாரகன், ஆரணன், மாதுனன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 30-01-2017 இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தாவடி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
வாசுகி- ஜேர்மனி தொ.பே.: +498315707211
சிவதாஸ் - டென்மார்க், தொ.பே.: +4597216580
சிவசங்கர் - கனடா தொ.பே.: +14164277362
கிரிதரன் (கிரி) - இலங்கை செல்லிடப்பேசி: +94777733790
வளர்மதி (சுமதி) - இலங்கை செல்லிடப்பேசி: +94777259855

தகவல்
குடும்பத்தினர்
இல. 73,
வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
இணுவில்.

(7666)

## 31 ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 1945.10.13 உதிர்வு 2017.01.01



### அமரர் திருமதி ஐயம்பிள்ளை சின்னப்பிள்ளை (பூபதி)

(ஆலங்கேணி, பூநகரி)

கடந்த 01.01.2017 இறைபதம் அடைந்த எமது குடும்ப தலைவியின் துயரச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசியூடாகவும் இரங்கற் செய்தி தெரிவித்தவர்களுக்கும் அன்னாரது இறுதிக் கிரியைகளின் போதும் இறுதியாத்திரையின் போதும் நேரடியாக கலந்து எம் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமக்கு உறுதுணையாக நின்று உதவிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து நிற்பதோடு 31.01.2017 நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.

(7579)

ஆலங்கேணி,
பூநகரி

கணவர்,
பிள்ளைகள்

## என்றும் நீங்காத நினைவுகளோடு முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 05 1950



மறைவு 30 01 2016

### அமரர் நிர்மலகுமாரன் ஜெயமணி

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
கருத்தரித்து எம்மை கலங்கவிட்டு சென்றாயோ--அம்மா
கதியிழந்து களையிழந்து நிர்க்கதியாகினோமே.
சிரித்தமுகம் சோலையிழந்து சென்றதுவே இப்போ
சிரிப்பிழந்து செழிப்பிழந்து தவிக்கின்றோமே
அன்பை நீர் மழையாய் பொழிந்தீர். இறுதியில்
ஆதரவின்றி எம்மை அழவிட்டு சென்றதேனோ?
எம் மனையின்று செயலிழந்து கலங்குதம்மா-- உதிர்ந்த
மலர்களாய் உன் மழலைகள் தவிக்கின்றோமம்மா
கல்லும் மண்ணும் உடலைக்குத்த-- போதுமம்மா
நீ கல்லறையில் பொய்யுறக்கம் கொண்டது
கலங்கி நிற்கும் எமக்கு ஆறுதல் கூறிட
தூக்கம் கலைந்து எழுந்து வாருங்களம்மா...

(7637)

அச்சுவேலி.


பிரிவால் துயருறும்
பிள்ளைகள்.

ஓம் நமசிவாய

ஓம்

Germany Hamm

ஓம்



# SRI VENKATESWARA PERUMAL TEMPLE

# ஸ்ரீ வெங்கடேச பெருமாள் கோவில்

## ஜேர்மனி, ஹம்

## நூதன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேகம்

| கர்மாரம்பம் | மஹாயாகாரம்பம் | பக்தர்கள் எண்ணைக்காப்பு | மஹா கும்பாபிஷேகம் |
|---|---|---|---|
| மங்கள துர்முகி வருடம் தை 23 | மங்கள துர்முகி வருடம் தை 23 | | மங்கள துர்முகி வருடம் தை 27 |
| **05.02.2017** | **05.02.2017** | **08.02.2017** | **09.02.2017** |
| ஞாயிற்றுக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை | புதன்கிழமை | வியாழக்கிழமை |
| பகல் 12.00 மணி முதல் 1.30 மணிவரை | மாலை 7.00 மணிக்கு | காலை 08.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை | காலை 10 மணிமுதல் 11 மணிவரை |

இலங்கையின் முதலாவது இந்து மத குருபீடாதிபதி சிவாகமஞானி

**அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்**

சங்கானை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான ஆதீன குரு முதல்வர் சிவாகமஞானி

**சிவப்பிரம்மஸ்ரீ. சிவா. நித்தியானந்த சிவாச்சாரியார்**

ஆகியோரின் குரு அருளாசியுடன்



கும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியார் : சர்வதேச இந்துமத குருபீடாதிபதி, 'சபரிமலைக் குருமுதல்வர்'

**ஆன்மீக அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார். J.P**

அவர்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

சர்வசாதகாசிரியர்கள் : சாதக கலாபமணி. பிரம்மஸ்ரீ நித்ய. சுதானந்த சர்மா (IDM – சங்கானை)

ஏனைய குருமார்கள் : சிவாகம பூஷணம் தேவி அனுக்கிரக கிரியாகிரகம் சிவஸ்ரீ இராமமுரளீதரக் குருக்கள், ஜேர்மனி
சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள், ஹனோவர் முத்துமாரியம்மன் ஆலய குரு,
சிவஸ்ரீ அருணாசலேஸ்வர குருக்கள், இந்தியா

அனைவரும் வருக! இறைஅருள் பெறுக!

**GERMANY HAMM SRI VENKATESWARA PERUMAL TEMPLE,** NASSAUER STR. 20, 59065 HAMM GERMANY. TEL: 004923814266420, 004917680569609

இங்ஙனம்:- ஆலய அறங்காவலர் சபையினர் - கும்பாபிஷேகக் குழுவினர்

(7673)

விதி என்பது ஒடுக்கப்பட்டவர்கள், மிதிக்கப்பட்ட வர்கள், கொதித்து எழாதிருக்காதவர்கள் செய்த சதி.

– ஒரு பெரியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எழுக தமிழாய் எழ கிழக்கிற்கு ஓர் அன்பு மடல்

எமதருமை கிழக்கு மாகாணத்தின் தமிழ் உறவுகளே! உங்கள் அனைவருக்கும் முதற் கண் வணக்கம்.

உங்கள் தொடர்பில் கடிதம் எழுத வேண்டும் என்ற நினைப்பு நீண்டகாலமாக இருந்த போதிலும் இன்றுதான் அதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா என்று தமிழ் மூதாட்டி ஔவை யார் கூறிவைத்த தத்துவம் இவ்விடத்திலும் பொருந்திக் கொண்டது எனலாம்.

இக்கடிதம் அவசரமாக எழுதப்படுகிறது. வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இருந்தும் வடக்கையும் கிழக்கையும் பிரித்து தமிழினத்தின் பலத்தை வேரறுக்க கடுமை யான முயற்சிகள் நடந்து வருகின்றன.

வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணங் களாக இருப்பதால் தமிழ் மக்களுக்கு நிறைந்த அனுகூலங்கள் உண்டு.

இருந்தும் அதற்குச் சந்தர்ப்பம் கொடுத்து விடலாகாது என்பதில் பேரினவாதம் கடும் பிர யத்தனம் செய்கின்றது.

இதற்கு எங்கள் முஸ்லிம் சகோதரர்கள் சிலரும் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதா கக் கேள்வி.

உண்மையில் வடக்கும் கிழக்கும் பிரிந்து போகு மாக இருந்தால், அது தமக்கு நன்மை என்று எம் முஸ்லிம் சகோதரர்கள் நினைக்கலாம். ஆனால் இந்த நினைப்பு வெறும் தோற்றப்பாடே யன்றி வேறில்லை என்பதே உண்மை.

வடக்கும் கிழக்கும் பிரியும்போது கிழக்கு மாகாணம் சிங்கள மக்களின் மேலாதிக்கத்தை பெற்றுக் கொள்ளும் என்பதே உண்மை.

எனினும் இந்த உண்மையை எம் முஸ்லிம் சகோதரர்களில் சிலர் புரியவில்லை என்றே கூறவேண்டும். எதையும் அனுபவத்தினூடாக கற்றுக் கொள்ளுதல் என்பதற்கு விட்டுவிட முடி யாது. அவ்வாறு விட்டுவிட முடியாத ஒன்றாக வடக்கு – கிழக்கு மாகாணங்களின் பிரிவும் உள்ளது.

வடக்கையும் கிழக்கையும் பிரித்து தமிழ் – முஸ்லிம் மக்களின் செறிவைக் குறைக்க நினைக்கின்ற பேரினவாத சிந்தனைக்கு நம் முஸ்லிம் சகோதரர்கள் ஒருபோதும் இடம்தந்து விடக்கூடாது.

வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணங் களாக இருப்பதற்கு தமிழ் – முஸ்லிம் சகோ தரர்களிடையேயான உறவு பலப்பட வேண்டும். இப்பலத்தை ஏற்படுத்துவதற்கு நம் தாய்மொழி யாம் தமிழ் மொழி போதுமானதாகும்.

தமிழ் மொழியின் வளர்ச்சியில் முஸ்லிம் சகோதரர்களின் பங்கும் பணியும் காத்திரமா னது. இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழில் எங்கள் முஸ்லிம் சகோதரர்களின் பாண்டித்தி யம் கண்டு நாம் வியந்த நாட்கள் அதிகம்.

அன்புமிகு முஸ்லிம் சகோதர்களே! தமி ழால் நாம் அனைவரும் உடன் பிறப்புக்கள். இலங்கைத் திருநாட்டின் சிறுபான்மை இனம் என்பதிலும் நாம் சகோதரர்கள்

ஆகவே எங்களிடம் ஏற்படும் ஒற்றுமை தமிழைப் பாதுகாக்கும். சிறுபான்மை இனத் தின் உரிமையைப் பாதுகாக்கும்.

ஆகையால் கிழக்கில் தமிழ் – முஸ்லிம் சகோதர உறவு பலப்பட வேண்டும். உங்களுக்கு நாங்கள்; எங்களுக்கு நீங்கள் என்பதாக எங்கள் ஒற்றுமைப்பலம் ஓங்கட்டும்.

வடக்கும் கிழக்கும் இணையட்டும். இதற் காக கிழக்கு மாகாணத்தின் தமிழ் உறவுகள் ஒன்றுபட்டு எழுக தமிழாய் எழட்டும்.

# அரசியலமைப்பில் திருத்தங்களைச் செய்யாது மகிந்த ஓய்வு பெற்றிருக்கலாம்- பிரதமர் ரணில்

(கொழும்பு)

அரசியலில் இருந்து ஓய்வு பெறும் உண்மையான தேவை முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இருந்திருக்குமாயின் அரசி யலமைப்புச் சட்டத்தில் திரு த்தங்களை செய்யாது ஓய்வு பெற்றிருக்கலாம் என பிரத மர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் சாலியபுர பிரதேசத்தில் "நாட்டை மாற் றியமைக்கும் ரணிலுடன் முன்னோக்கி செல்வோம்" என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் நடைபெ ற்ற பொதுக் கூட்டத்தில் கல ந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறி யுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அரசியல் ரீதியாக காணப்படும் பிரச்சினை தொடர்பாக தன்னால், பேச முடியாது எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் போட்டிக்கு வரவில்லை என்றால் தான் ஓய்வு பெற விருந்ததாக முன்னாள் ஜனாதிபதி நுகேகொடை கூட்டத்தில் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் க்ட்சி யின் ஜனாதிபதியாக இருந் தாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதியாக இருந்தாலும் இரண்டு தவ ணைகள் பதவி வகித்து ஓய்வு பெறுவார்கள்.

மகிந்த ஓய்வுபெற எண் ணியிருந்தால், 18 ஆவது திருத்தச சட்டத்தை கொண்டு வந்து, ஜனாதிபதியாக ஒரு வர் பதவி வகிக்கும் இரண்டு தவணை காலத்தை ஏன் நீக்கினார்?. இரண்டுதவணை என்ற அரசியலமைப்புச் சட்டத்தை அப்படியே வைதது விட்டு ஓய்வுபெற்று சென் றிருக்கலாமே எனவும் பிரதமர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக அநுராதபுரத்தில் இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் தொழில் வாய்ப்பு கிடைக் கும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியவில்லை நாமல் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங் கத்தில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் குறித்து தெளி வான சாட்சியங்கள் உள்ள நிலையிலும் அவர்களுக்கு எதிராக பொலிஸார் சட் டத்தை நடைமுறைப்படுத்த வில்லை என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜப க்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் தான் உள்ளிட்ட குழுவினர் மீது குற்றம்சாட் டிய போதும் அரசாங்கத் திற்கு எதனையும் நிரூபிக்க முடியவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு கரு த்து வெளியிட்டுள்ளர்.

எதுஎவ்வாறு இருப்பி னும், தற்போதைய அரசாங் கத்தில் தவறிழைத்தவர் களுக்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுக்கப்படும் என, அமைச்சர் ராஜித சேனா ரட்ன தெரிவித்தார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட வேளையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்து ள்ளார். (இ-3)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**அதிகாலையில் எழுந்து படிப்பதால் கிடைக்கும் பயன்கள் என்ன?**

சூரியன் உதிப்பதற்கு 3 மணி 48 நிமிடத்திற்கு முன் பாக அதிகாலை ஆரம்பமாகி றது. இந்த முகூ ர்த்த வேளை பிரம்மாவின் நாமத்தில் அறி யப்படுவதால் பிரம்மாவின் தர்மபத்தினி யான சரஸ்வதி தேவி இந்த நேரத்தில் விழி த்து செயற்பட்டுக் கொண்டி ருப்பாள் என்று கூறுவார் கள். இந்த யாமம் சரஸ்வதி யாமம் என்று அழைக்கப்ப டுகிறது. சிரசின் இட்துபுற மாகத்தான் வித்யாகிரந்தி செயற்படுகிறது. இந்த வித்யா கிரந்தி தான் கற்பதற்கு துணை நிற்கி றது.




அதுமட்டு மல்லாமல் அதி காலை வேளை யில் படிப்பது ஒருபோதும் மறந்து போகாது என்று ஆய்வுக ளும் நிரூபித் துள்ளன. கல் வியில் திறமை யில்லாத குழந்தைகளிடம் நடத்திய ஆய்வு இதை சரி என்கிறது. (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை வவுனியா பிர தேசத்தில் குருமன்காடு கிரா மம் வெளிக்குளத்திலிருந்து குடாகச்சக்கொடிய வரை, கோவில் குளத்திலிருந்து சிதம பரபுரம் வரை, TMM கல்லு டைக்கும்ஆலை, ஆகிய இடங் களிலும் மன்னார் பிரதேசத தில பள்ளிமுனை, நானாட் டானிலிருநது அச்சங்குளம் வரை, எருவிட்டான் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சாஸ்திரங்கள்

✦ ஒருவன் சாப்பிடும் போது அன்னத்தை நிந்திக்கா மல் மௌனமாகச் சாப்பிட வேண்டும். நிந்தித்துக் கொண்டே சாப்பிட்டால் மறுபிறவியில் ஊனின்றி, உறக்கமின்றி, ஊர் ஊராய் அலைந்து திரிவான்.

-போஜன தர்மம்

✦ உடைந்த தட்டு, நெளிந்த தட்டு, பழுதுபட்ட தட்டு, பின்னப்பட்ட பாத்திரம் ஆகியவற்றில் உணவு அருந்தல் கூடாது.

-ஸ்மிருதி

✦ தலைவாசலுக்கு நேரே தலைவைத்துப் படுத்தல் கூடாது. குடும்பத் தலைவன் படுப்பது கூடவே கூடாது. அவ்வாறு செய்தால் தரித்திரம் வளரும், சங்கடங் கள் பெருகும்.

-சயன சாஸ்திரம்

✦ பஞ்சபூதங்களில் நிலத்திற்குரிய திதிகள் மூன்று. அவைகள் திருதியை, தசமி, பௌர்ணமி ஆகியன வாகும்.

-பிரம்மரகசியம்

✦ ஒரு வெள்ளை நிறப்பாம்பு தன்னைக் கடித்தது போல் கனவு கண்டால் பத்து நாளில் அதிசயிக்கத்தக்க அள வுக்கு மிகப்பெரும் இலாபமும் அதிர்ஷ்டமும் உண் டாகும்.

-கனவு சாஸ்திரம்

✦ வெண்கலப் பாத்திரத்தால் கால் கழுவுதல் கூடாது.

-ஸ்மிருதி

✦ இறந்தவருக்கு கல்லறை கட்டினால் கல்லறையை எப்போதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். கல்லறையின் நிறம் மாறினால் அந்த குடும்பத்துக்கு ஆகாது.

-வாஸ்து சாஸ்திரம்

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## தவமும் அறமும்



தவத்தையும் அறத்தையும் நீங் கள் மிகச் சுலபமாகப் பற்றிச் செல்லும் முறையினை இப்போது உங்களுக் குச் சொல்லுகின்றேன். தவம் எதற்காக என்றால் இறையுணர்வு பெற்று இறை வனோடு உறைவதற்காக. அறம் எதற்காக என்றால் இதுவரையில் செய்த கர்மங்களின் அழுத் தத்தினால் எண்ணமும் செயலும் தோன்றிக் கொண்டே இருக்கின்றனவே, அதிலிருந்து செய்து செய்து நல்லனவே செய்யக்கூடிய அளவுக்குத் தீயன செய்யாது இருக்கக் கூடிய ஒரு தூய்மைக்கு வரவேண்டும்.

மனத் தூய்மை தவத்தினால் வரும் வினைத்தூய்மை செயலினால் வரும் நல்ல செயல் அறத்தினால் வரும். அதனால் இது வேண்டும். இந்த இரண்டையும் ஒருங்கே பார்ப்பதற்கு என்ன வேண்டும்? இந்தக் காலத்திற்கு வேண்டி யது அதுதான். அந்த அறம், தவம் இவற்றை வைத்துத் தான் இதுவரையில் இந்த உலகத்திலே ஏற்பட்ட மதங்க ளெல்லாம் அமைந்துள்ளன.

எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் இறை-உணர் வைக்காட்டி அற-உணர்வை காட்டிடுவதாகவே இருக்கும். இந்த இரண்டும் தான் எல்லா மதங்களிலும் உள்ளன. இறை உணர்வுக்கு இறைவழிபாடு. உலக மக்களோடு தொடர்பு கொண்டு இனிமையாக – அதாவது ஆங்கிலத்தில் "harmony" என்று சொல்கின்றோமோ அவ்வாறு - வாழ்வதற்கு என்ன வேண்டும்? ஒழுக்கம், கடமை, ஈகை என்ற அறம் வேண்டும். இந்த அறநெறி உலக வாழ்க்கை க்கு அவசியம்.

தவநெறி, உளப்பயிற்சி, அறிவு மேன்மை இறைவனை அடைய இவை வேண்டும். இதுவரையில் மதங்களி ளெல்லாம் அந்த உணர்வை ஏற்படுத்துவதற்காக இதெல் லாம் சொன்னார்கள். இப்பொழுது அதை விட இன்னும் இந்த விஞ்ஞான யுகத்திலே மிகவும் சுருக்கமாகத் தெரிய வேண்டுமானால் என்ன - அந்தச் செயலிலேயே சிவனைக் காணலாம்.

# நல்லூர் பிரதேச செயலகத்தின் ஆண்களுக்கான கரப்பந்து

## நாயன்மார்கட்டு பாரதி சம்பியன்




நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியானது (28.01. 2017) அன்று அரியாலை சரஸ் வதி சனசமூக நிலைய மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. ஐந்து சுற்றுக் களைக் கொண்ட இறுதிப் போட்டியில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் அமராகவி விளையாட்டு கழகம் மோதி யது. இதில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் 3:0 (25:21, 25:23, 26:24) என்ற ரீதியில் வெற்றி பெற்று 2017ம் ஆண்டுக்கான ஆண்க ளுக்கான கரப்பந்தாட்ட வெற்றிக் கேட யத்தை தனதாக்கிக்கொண்டனர். (க)

# மாலுசந்தி மைக்கல் அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி



கரவெட்டி பிரதேச செயலகத் தில் பதிவு செய்யப்பட்ட 32 கழகங் களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் (28.01.2017) அன்று காலை 8-30 மணி முதல் ஏ பிரிவு அணிகளுக்கிடையில் மாலு சந்தி மைக்கல் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது போட்டி யில் இமையாணன் இளைஞர் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் இளைஞர் அணி 10 ஓவர்களில் 51 ஓட்டங்களை பெற்றது. மாலுசந்தி மைக்கல் அணியின் பந்து வீச்சு சார்பில் தினோஜன்,முரளி,தீபன் தலா 2 தர்சன்,பிரசாந், அனோஜன் தலா 1 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மாலுசந்தி மைக்கல் அணி 9 விக் கெட்களினால் வெற்றி பெற்றது. ரகுவரன் 40, தர்சன் 6 ஓட்டங் களை பெற்றனர். (க)



31 ஆவது ரூபவாஹினி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியனான யாழ். மாவட்ட அணியினரை படத்தில் காணலாம்.

# குருநகர் பாடும்மீன் வெற்றி



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரிவு II இற்கான உதை பந்தாட்டத் தொடரின் 3ம் இடத்திற்கான போட்டியில் (28.01.2017) அன்று நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடும்மீன் மற்றும் பேருவளை Grate star. அணிகள் மோதின. பரபரப்பாக நடைபெற்ற போட்டியின் ஆட்டநேரமுடிவில் பாடும்மீன்கள் அணி 1-0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தெல்லிப்பழை பிரதேச செயலக கபடிச் சுற்றுத் தொடர்

## பலாலி விண்மீன் சம்பியன்



தெல்லிப்பழை பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான கபடிப் போட்டியில் பலாலி விண்மீன் அணி சம்பியனாகியது.

தெல்லிப்பறை பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான விளை யாட்டுப் போட்டியில் 28.01.2017 அன்று நடைபெற்ற கபடிப் போட்டியின் அரையிறுதிப் போட்டி யில் மல்லாகம் SMS விளை யாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட பலாலி விண்மீன் கபடி அணி 106:26 என்ற புள்ளியடிப்படை யில் வெற்றிபெற்றது.


தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஞானவைரவர் விளை யாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட பலாலி விண்மீன் கபடி அணி 59:15 என்ற புள்ளியடிப்படையில் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று சம்பியனாகியது. (க)


# பெண்களுக்கான கரப்பந்தாட்டம் அரியாலை ஐக்கியம் சம்பியன்



நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழ கங்களுக்கிடையிலான 2017 விளையாட்டுவிழா (28.01.2017)அன்று அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற பெண்களுக கான கரப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகியது அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம். (க)

# பும்ராவின் அசத்தலான பந்து வீச்சால் 2வது ரி-20 இல் இந்திய அணி வெற்றி





இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது ரி20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 5 ஓட்டங்களால் த்ரில் வெற்றி பெற்றது.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது ரி20 கிரிக்கெட் போட்டி நாக்பூரில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் மோர்கன் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 144 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இந்திய அணி சார்பில் கே.எல். ராகுல் அதிகபட்சமாக 71 (47) ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். மணிஷ் பாண்டே 30(26), அணித தலைவர் ஹோலி 21 (15) ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் கிறிஸ் ஜோர்டன் 3 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

145 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 139 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.

பரபரப்பான இப்போட்டியின் கடைசி ஓவரில் 8 ஓட்டங்கள் தேவைப்பட்டன. பும்ரா அந்த ஓவரை வீசினார். 6 பந்துகளில் வெறும் 2 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து இரண்டு விக்கெட்டுகளைச் சாய்த தார். நெஹரா அபாரமாக பந்துவீசி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அபாரமாக பந்து வீசிய பும்ரா போட்டியின் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளதால் 1:1 என்ற கணக்கில் தொடர் சமநிலை ஆகி உள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான 3ஆவதும் இறுதியுமான ரி20 போட்டி பெங்களுருவில் வருகின்ற முதலாம் திகதி நடைபெறுகிறது.(க)

# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் பெடரரை வீழ்த்தி நடால் சம்பியன்

அவுஸ்திரேலிய கிராண்ட்ஸ்லாம் ஓபன் டென்னிஸ் தொடரில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் சம்பியனானார்.

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் இறுதிப் போட்டியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஸ்பெயினின் ரபெல் நடாலை எதிர்கொண்டார்.

இதில் முதல் செட்டை பெடரர் 6-4 எனக் கைப்பற்றினார். இந்த செட்டை கைப்பற்ற பெடரருக்கு 34 நிமிடங்கள் தேவைப்பட்டன. முதல் செட்டை இழந்த நடால் 2ஆவது செட்டில் சிறப்பாக விளையாடினார். இதனால் 2ஆவது செட்டை 6-3 என நடால் கைப்பற்றினார். இந்த செட்டை கைப்பற்ற நடாலுக்கு 42 நிமிடங்கள் தேவைப்பட்டன. 3ஆவது செட்டை பெடரர் 6-1 என 40 நிமிடத்தில் கைப்பற்ற, 4ஆவது செட்டை நடால் 40 நிமிடத்தில் 6-3 எனக் கைப்பற்றினார். இதனால் 4 செட்டுகள் முடிவில் இருவரும் தலா 2 செட்டுகளை கைப்பற்றி 2-2 என சமநிலையில் இருந்தனர்.

வெற்றியை தீர்மானிக்கும் 5-ஆவது மற்றும் கடைசி செட்டில் முதல் கேமை நடால் கைப்பற்றினார். பெடரர் சேர்வ் செய்த அந்த கேம்-ஐ சிறப்பாக முறியடித்தார். தான் சேர்வ் செய்த 2ஆவது கேம்-ஐ நடால் கைப்பற்றினார். இதனால் நடால் 2-0 என முன்னிலை பெற்றார்.

3ஆவது கேம்-ஐ பெடரர் கைப்பற்றினார். இதனால் நடால் 2-1 என முன்னிலையில் இருந்தார். 4ஆவது கேம்-ஐ நடால் கைப்பற்றினார். இதனால் 3-1 என முன்னிலை பெற்றார்.

பெடரர் சேர்வ் செய்த 5ஆவது கேம்-ஐ அவர் எளிதில் கைப்பற்றினார். இதனால் நடால் 3-2 என முன்னிலை பெற்றார். நடால் சேர்வ் செய்த 6ஆவது கேம்-ஐ பெடரர் கடும்போராட்டத்துக்குப் பின் முறியடித்தார். இதனால் 3-3 என ஸ்கோர் சமநில்ல பெற்றது. அதன் பின் பெடரர் ஆட்டத்தை தன் பக்கம் திருப்பினார்.

7ஆவது கேம்-ஐ பெடரர் ஆக்ரோஷமாக சேர்வ் செய்தார். இதனால் எளிதில் அதை கைப்பற்றினார். இதனால் பெடரர் 4-3 என முன்னிலை பெற்றார். நடால் சேர்வ் செய்த 8ஆவது கேம்-ஐ பெடரர் அட்டகாசமாக முறியடித்தார்.



இதனால் பெடரர் 5-3 என முன்னிலை பெற்றார். தான் சேர்வ் செய்த 9ஆவது கேம்-ஐ கடும் போராட்டத்துக்குப் பின் பெடரர் கைப்பற்றினார். இதனால் கடைசி செட்டை 6-3 எனக் கைப்பற்றி 3-2 என நடாலை வீழ்த்தினார்.

கடைசி செட்டை வெல்ல பெடரருக்கு 61 நிமிடங்கள் தேவைப்பட்டன. நடாலை வீழ்த்த ஒட்டுமொத்தமாக சுமார் 3.30 மணி நேரம் தேவைப்பட்டுள்ளது. இது பெடரரின் 5-வது அவுஸ்திரேலிய ஓபன் பட்டமாகும். ஒட்டுமொத்தமாக 18ஆவது முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார். (க)


## கண்ணீர் அஞ்சலி

## இரத்தினம் சோதிலிங்கம்

*இல 5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட இரத்தினம் சோதிலிங்கம் அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.*

*(குறிப்பு :- அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 30.01.2017 திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்)*

கெங்காதரம்பிள்ளை குடும்பம்
சரவணை முருகபவனம்,
சரவணை மேற்கு,
வேலணை.

(C-7408)


## இலங்கைக்கு ...

முன்னதாக, ஐக்கிய அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் பதவியிலிருந்து நிஷா பிஸ்வால், விலக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்பின் அறிவுறுத்தலுக்கு அமைய இவர் அந்த பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

2014ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதியிலிருந்து ஐக்கிய அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலாளராக இந்திய வம்சாவளியரான நிஷா பிஸ்வால், பதவி வகித்துவந்தார்.

இந்நிலையில், ஐக்கிய அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலாளராக நிஷாவின் இடத்துக்கு வில்லியம் ட்ரோட் நியமிக் கப்பட்டுள்ளார்.

இதனைத் தவிர, அமெரிக்காவின் ஐக்கிய நாடுகளின் தூதுவர் சமந்தா பவரும் அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர், அமெரிக்காவின் ஐக்கிய நாடுகளின் 28ஆவது தூதுவராக 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதியிலிருந்து கடமையாற்றி வருகின்றார். அவரது இடத்துக்கு நிக்கி ஹெலிய் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (11)

## சுதந்திரக் கட்சி ...

ப்பதற்கு மேலதிக கால அவகாசத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் கோரியதை அடுத்தே வழிநடத்தல் குழுவின் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை டிசம்பர் மாதம் 10ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அந்த நடவடிக்கையும் பிற்போடப்பட்டது. ஜனவரி மாதம் 9ம் திகதி தொடக்கம் 11ம் திகதி வரை உபகுழுவின் அறிக்கை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறும்போது வழிநடத்தல் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என மீன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்னதாக கடந்த 5ம் திகதி நடைபெற்ற வழிநடத்தல் குழுவின் கூட்டத்தை ஒத்தி வைப்பதற்கும் உபகுழுவின் அறிக்கை மீதான விவாதத்தை ஒத்தி வைப்பதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மீண்டும் கடந்த 26ம் திகதி கூடிய வழிநடத்தல் குழுவின் சந்திப்பு 10 நிமிடங்கள் வரையே நீடித்ததுடன் தீர்மானங்கள் எதுவும் எட்டப்படாமல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே சுமந்திரன் புதிய அரசியல் அமைப்பு தயாரிப்பு பணி சுதந்திரக் கட்சியினராலேயே தாமதமாவதாக காட்டமுனைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (11)

## நாவற்குழியில் ...

காணியில் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து சில குடும்பங்கள் அத்துமீறி குடியேறியிருந்தன. அதனை தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு பகுதிகளிலும் அத்துமீறி குடியேறிருந்த குடும்பங்கள் கடந்த கால அரசாங்கத்தால் அப்பகுதியில் குடியமர்த்தப்பட்டார்கள்.

அதனை தொடர்ந்து குறித்த பிரதேசத்தில் உள்ள மேலதிக காணிகளில் மேலும் சில காணிகள் அற்ற குடும்பங்கள் குடியேற்றப்பட்டு தற்போது அப்பகுதியில் 200 சிங்கள குடும்பங்களும், 53 தமிழ் குடும்பங்களும் வசித்து வருகின்றன. இந்த நிலையில் வீடமைப்பு அதிகார சபையால் இந்த வருடம் 200 தமிழ் குடும்பங்களுக்கும் 50 சிங்களக் குடும்பங்களுக்கும் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் 5 லட்சம் ரூபாய் பெறுமதியிலான வீட்டு திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இந் நிலையிலேயே மேற்படி வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்றைய தினம் நடைபெறவுள்ளது. முன்னதாக வீடமைப்பு அதிகாரசபை அமைச்சர தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வடக்கு மாகாண உறுப்பினர்களின் எதிர்ப்பு காரணமாக அமைச்சர்களின் வருகை திடீர் இரத்தாகியுள்ளது.

நாவற்குழியில் சிங்கள மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கு அனுமதிக்க முடியாது என்றும் தமிழ் மக்கள் காணியற்று இருக்கும் போது அத்துமீறி குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கு காணிகள் வழங்கப்படக்கூடாது. இச் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என கடந்த வாரம் இடம் பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் வடமாகாண சபை உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டி எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

குறித்த வீட்டு திட்டத்தை தமிழ் மக்களுக்கு வழங்குவதோடு, சிங்கள மக்களையும் அதற்குள் திட்டமிட்ட ரீதியில் அரசு உள்வாங்கியிருந்தது. இதனால் தம்மால் எதிர்ப்பு வெளியிட முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், அத்துமீறி குடியேறிய சிங்கள மக்களுக்கு தமிழ்ப் பிரதேசங்களில் காணிகளை வழங்க முடியாது. இந்த அடிக்கல் நாட்டும் வைபவம் வெறும் சம்பிரதாய பூர்வமாகவே நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் தற்போதைக்கு எந்த எதிர்ப்பும் காட்டுவதற்கு தீர்மானிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். (4)

## பயங்கரங்க...

இதனைத் தெரிவித்தார்.

மகிந்தவின் ஆட்சிக் கவிழ்ப்பு என்பது புஷ்வாணம் போன்றது எந்த வகையிலும் அதற்கு இடம் கொடுக்கப்படமாட்டாது. போலித் திட்டங்களினால் ஆட்சியை கவிழ்க்க முடியாது.

2020ஆம் ஆண்டு கூட்டு எதிர்ககட்சி தலைமையில் புது ஆட்சி அமைக்கப்படும்என கூறியுள்ளாரகள்.

அவ்வாறு ஆட்சி அமைக்கப்படும் என்றால், நீங்கள் அனைவரும் மீண்டும் தாக்குதலை மேற்கொள்ளத் தயாராக இருங்கள். மரணிக்கவும் தயாராக இருந்து கொள்ளுங்கள்.

மீண்டும் வெள்ளை வான் கலாசாரம் வந்து சேரும் அவற்றில் இருந்து தப்பிக்கொள்ள இடங்களையும் தயார் படுத்திக்கொள்ளுங்கள். ரவுடிகளின் அராஜகங்களுக்கும், அச்சத்தின் மத்தியில் வாழவும் தயாராகுங்கள்.

இவ்வாறான பயங்கரங்களைச் சந்திக்க வேண்டுமென நினைக்கின்றீர்களா? அல்லது அவற்றுக்கு எதிராக ஒன்று திரள வேண்டுமா என்பதனை மக்களே இப்போது முடிவு செய்ய வேண்டும்.

அதேபோல் கோத்தபாய மீண்டும் அரசியலுக்கு வரதிட்டமிடுகின்றார். அவரை வரவேற்கின்றேன். ஆனால் அவர் தோல்வியைச் சந்திப்பார்.

அப்படி வருபவர் சும்மா இருக்க மாட்டார் தனக்கு கீழ் குழுக்களை அமைத்துக் கொள்ளுவார். தான் தோன்றித்தனமாக செயற்படு வார் எனவும் பொன்சேகா தெரிவித்தார். (இ-3)

## சுமந்திரனின்...

களை இலங்கை பாதுகாப்பு தரப்பு கைது செய்துள்ளதாக நேற்றைய தினம் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (11)

## மீன்பிடிக்கச் சென்ற...

மன்னார் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள சௌத்பார் கிராமத்தில் இருந்து வள்ளம் ஒன்றில் மீன் பிடிப்பதற்காக சென்ற தந்தையும், அவரது 09. வயதுடைய மகனும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு சௌத்பார் கிராமத்தில் இருந்து மீனவர் ஒருவர் தனது 09, வயது மகனை துணைக்கு அழைத்துக் கொண்டு மீன் பிடிப்பதற்கு கடலுக்குச் சென்றுள்ளார்.

வழமையாக நள்ளிரவில் கரைக்குத் திரும்பி விடும் மீனவர் அதிகாலை ஆகியும் கரைக்கு திரும்பாத நிலையில், கலக்கமடைந்த குடும்பத்தினர் கிராமத்து மீனவர்களின் உதவியுடன் கடலுக்குள் தேடியதுடன், மன்னார் பொலிஸாருக்கும் அறிவித்தனர்.

பொலிஸாரும் கடற்படையினரின் உதவியுடன் தேடுதலை மேற்கொண்ட நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கிராமத்து மனவர்களும், மன்னார் பொலிஸாரும் மேற்படி இருவரையும் உயிரிழந்த நிலையில் சடலங்களை மீட்டுள்ளனர்.

இவ்வாறு உயரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டவர்கள்,

மன்னார் சௌத்பார் கிராமத்தைச் சேர்ந்த மீனவரான ஜெஸ்மன் (வயது 49) என்பவரும் அவரது இளைய மகனான ஜெ.ஜெக்ஸ்சன் (வயது 9) என்னும் பாடசாலை செல்லும் மாணவனுமே மீட்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில், மன்னார் பொலிஸார் சடலங்களை மீட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (15)

## ஏழு முஸ்லிம்...

காணிப்பு நடைமுறைகள் சிறந்த முறையில் அமையும் வரை அமுலில் இருக்கும் என ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசித்து வரும் சுமார் ஒரு கோடி பேரை அவர்களது சொந்த நாட்டுக்கு திரும்ப அனுப்பவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதற்காக 10 ஆயிரம் அதிகாரிகளை நியமிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நாடுகளைச் சேர்ந்தவர்கள் கிறீன் கார்ட் (Green Card) எனப்படும் அமெரிக்காவின் குடியுரிமையை பெற்றிருக்கின்ற நிலையிலும் குறித்த தடையுத்தரவு நடைமுறையில் இருக்கும், என அத்தடையுத்தரவில் அவர குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதிக்குள்ள, நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு குறித்த உத்தரவு (Executive Order) வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உலகநாடுகளைச்சேர்ந்த பலரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மெக்சிகோவிலிருந்து வரும சட்டவிரோத குடியேற்றக்காரர்களை தடுப்பதற்காக, இரு நாடுகளுக்கிடையில் தடுப்புச் சுவர் அமைப்பதற்கான உத்தரவில், கடந்த புதன்கிழமை ட்ரம்ப் கைச்சாத்திட்டிருந்தார். (11)

(மற்றொரு செய்தி உள்ளே)

## 9 பல்கலைக்கழக...

கழக மாணவர்களும் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்றிரவு 9.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தின் போது பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் எருமை மாட்டுக் கூட்டத்துடன் மோதியுள்ளதாக சம்பவ இடத்திற்கு சென்றுள்ள கனகராயன் குளம் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விபத்தினை ஏற்படுத்திய சாரதியை கைது செய்துள்ளதுடன் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இச்சம்பவத்தில் பேருந்து பலத்த சேதம் அடைந்துள்ளது. (15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உலககுருநாதன் ராகவன்**

அவர்கள் 27.01.2017 அன்று சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவர்களை சட்டத்துறையில் மேன்மேலும் பல பதவிகளைப் பெற்று வளர எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனை பிரார்த்திக்கின்றோம்.

செல்வச்சந்நிதி தொண்டைமானாறு

வாழ்த்துவோர் : குடும்பத்தினர்

(7671)

## தவறிவிட்டது

Qw 8116 எனும் இலக்கமுடைய சி.சிவறொபின்சன் ஆகிய எனது முச்சக்கர வண்டியின் வாகனப் பதிவுச் சான்றிதழ் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கும் உரும்பிராய் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்

**0778695060**

(7676)

## காணி விற்பனைக்கு

பிறவுண் வீதியில் 2 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசி தீர்க்கப்படும். தரகர் தேவையில்லை.

**தொடர்பு:-0702724511**

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்

சனி-ஞாயிறு

(9:AM-5:PM வரை)

(7674)

## மரண அறிவித்தல்

### குமாரரெத்தினம் ஸ்ரீதரன் (ரவி)



வேலணை கிழக்கு, 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குமாரரெத்தினம் ஸ்ரீதரன் 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரரெத்தினம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் லலிதா தேவியின் (மணி) அன்புக் கணவரும் கருணாந்தசிவம் (கனடா), மணிமேகலாதேவி (அவுஸ்திரேலியா), சற்குணதேவி (கனடா), வரதலட்சுமி (கொக்குவில்), ராகுலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இ.க. நாகராசா, இ.க.தியாகராசா, இ.க.தங்கராசா, இ.க.யோகராசா மற்றும் இ.க.செல்வராசா (இந்தியா), தவமணிதேவி (அமெரிக்கா), காலஞ்சென்ற லீலாவதி மற்றும் சுகந்தாதேவி (கனடா), சுந்தரமூர்த்தி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற பத்மநாதன் (கனடா) மற்றும் அருள்தாஸ் (கொக்குவில்), பிரியாழினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2017) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் வேலணை கிழக்கு, முதலாம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:லலிதாதேவி
மணி (மனைவி)

(7677)


## Spoken English with grammar

U.Kஇல் படித்த அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் Spoken English with grammar மற்றும் O/L, A/L பரீட்சை வினாத்தாள் வகுப்புகள் உங்கள் வசதிகளிற்கேற்ப வீடுகளில் வந்து கற்றுத்தரப்படும்.

**தொடர்பு:0766151837**

(7663)

## முக்கிய அறிவித்தல்

T.K.T தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
சுத்தமான திறம் நல்லெண்ணெய்
விற்பனையாளர்

அன்பான வாடிக்கையாளர்களே 30.01.2017 இன்று முதல் எள்ளு விலை உயர்வால் ஒரு போத்தல் நல்லெண்ணெய் (750ML) சில்லறை விலை 530/- ரூபாவாக விலை உயர்ந்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
T.K.T,
மூத்தநயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

021 225 5718

(7675)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்

வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை




365

72

(Express Service)

(Door to Door Service)

aramex FedEx.

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
call 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
Call 021 222 3536

(C-7396)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.